வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 18.11.2024 திங்கட்கிழமை இதழ் : 322 பக்கங்கள் : 12

# புதிய அமைச்சரவை இன்று பதவியேற்கிறது

கொழும்பு, நவம்பர் 18

**23 பேர் கொண்ட புதிய அமைச்சரவை இன்றைய தினம் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்யவுள்ளது.**

இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஜனாதிபதி செயலகத்தில் இந்தப் பதவிப் பிரமாண நிகழ்வு நடைபெறவுள்ளது.

நாட்டின் 10ஆவது பாராளுமன்றத்துக்கான தேர்தல் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. தேர்தல் முடிவுகளின் பிரகாரம் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி 159 ஆசனங்களை கைப்பற்றியது.

இதைத் தொடர்ந்து இன்றைய தினம் புதிய அமைச்சரவை அமைக்கப்படவுள்ளது.

புதிய அமைச்சரவையில், தற்போதைய பிரதமர் ஹரிணி அமரசூரியவே தொடர்ந்தும் செயல்படுவார். இதேபோன்று, விஜித ஹேரத் மீண்டும் வெளிவிவகார அமைச்சராக பதவியில் தொடர்வார்.

இதேநேரம், பாதுகாப்பு, நிதி அமைச்சுகளை ஜனாதிபதி அநுர தம் வசமே வைத்திருப்பார்.

பிரதமருக்கு மேலதிகமாக தென் மாகாணத்திலிருந்து புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட மற்றுமொரு பெண் பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சரவையில் இணைக்கப்படவுள்ளார். 11

## தமிழ் அரசின் தேசிய பட்டியல் எம். பியாகிறார் சத்தியலிங்கம்



வவுனியா, நவ. 18

இலங்கை தமிழ் அரசு கட்சி யின் தேசியப் பட்டியல் ஆசனத்தை அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் ப. சத்தியலிங்கத்துக்கு வழங்குவதற்கு கட்சியின் மத்திய குழு முடிவு செய்துள்ளது என்று அந்தக் கட்சியின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழு கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை வவுனியா ஈரப்பெரியகுளத்தில் தனியார் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது. இதில், எடுக்கப்பட்ட முடிவுகளை 11

## அர்ப்பணிப்புடன் சேவையாற்றுவேன்!

### சத்தியலிங்கம் தெரிவிப்பு

வவுனியா, நவ. 18

"என்மீது கட்சி வைத்த நம்பிக்கையை ஏற்று இந்தப் பகுதி மக்களுக்கு முழுமையான சேவையை அர்ப்பணிப்போடு செய்வேன்", என்று பாராளுமன்ற உறுப்பினர் ப. சத்தியலிங்கம் தெரிவித்தார்.

தமிழ் அரசு கட்சியின் தேசியப் பட்டியல் மூலமான எம். பி. பதவியை அவருக்கு வழங்குவதற்கு கட்சியின் மத்திய குழு நேற்று தீர்மானித்தது. இதன் பின்னர் அவர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், பெரும் பொறுப்பு என் மீது சுமத்தப்பட்டுள்ளது. மாகாண சபை உறுப்பினராக இருந்த போது பல அபிவி ருத்தித் திட்டங்களை செய்திருந்தேன். இருந்தபோதும் ஏதோ ஒரு 11

## அனைத்து தரப்பினரையும் அரவணைத்து செல்ல தயார்!

### வவுனியாவில் சிறீதரன் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 18

"எமது நோக்கம் மற்றும் இலக்கின் அடிப்படையில் அனைத்து தரப்பினரையும் அரவணைத்துச் செல்ல நாங்கள் தயாராக இருக்கிறோம்", என்று சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் குழு கூட்டம் நேற்று வவுனியாவில் நடந்தது. இதன் பின்னர் அவர் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், சில கருத்தியல் ரீதியான வேறுபாடுகளை களைந்து மன்னார், வவுனியா 11

## தமிழ் அரசின் பாராளுமன்ற குழு தலைவரானார் சிறீதரன்!

- குமார கோகுலன் -



வவுனியா, நவ. 18

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற குழு தலைவராக சி. சிறீதரன் செயல்படுவார் என்று அந்தக் கட்சியின் மத்திய குழு அறிவித்துள்ளது.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் நேற்று வவுனியாவில் நடைபெற்றது. இதிலேயே இந்த முடிவு எட்டப்பட்டது.

இதேவேளை, கட்சியின் பேச்சாளர் பதவி தொடர்பாக பாராளுமன்ற முதலாவது அமர்வின் 11

## புதிய அரசமைப்பை நிறைவேற்றுவோம்!

### ரில்வின் சில்வா தெரிவிப்பு



கொழும்பு, நவ. 18

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் சர்வஜன வாக்கெடுப்புடன் நாட்டின் புதிய அரசமைப்பை நிறைவேற்றுவதுடன், தேர்தல் விஞ்ஞாபனத்தில் வழங்கப்பட்டுள்ள உறுதிமொழிகளும் நிறைவேற்றப்படும் - இவ்வாறு ஜே. வி. பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் முன்வைக்கப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனத்தில் புதிய 11

## தேசியப் பட்டியல் மூலமாக எம். பியாகிறார் சந்திரசேகரம்!

கொழும்பு, நவ. 18

தேசிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியலில் அந்தக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகரின் பெயரும் இடம்பெற்றுள்ளது.

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி 141 ஆசனங்களை கைப்பற்றியது. அந்தக் கட்சிக்கு தேசிய பட்டியல் மூலமாக 18 ஆசனங்கள் கிடைத்தன. தேசியப் பட்டியலின் மூலம் பாராளுமன்ற உறுப்புரிமையை பெறுபவர்களின் விவரங்களை தேசிய மக்கள் சக்தி நேற்று அறிவித்தது.

இதன்படி, வடக்கு மாகாணத்தில் அந்தக் கட்சி யின் யாழ். மாவட்ட அமைப்பாளர் 11

## வடக்கின் முதலமைச்சராக சுமந்திரன் பொருத்தமானவர்

### மத்திய குழுவில் கூறிய சிறீதரன்

வவுனியா, நவ. 18

எம். ஏ. சுமந்திரனின் தேவை தமிழ் மக்களுக்கு தேவை. அவர் வடக்கு மாகாணத்தின் முதலமைச்சராக வரவேண்டும் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் சி. சிறீதரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று நடந்த மத்திய குழுக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் கூறுகையில், "சுமந்திரன் அவசரப்படக்கூடாது. அவரின் 11

## ஜனாதிபதியின் முதல் பயணம் மத்திய கிழக்கு நாட்டுக்கு?

### அடுத்ததாகவே இந்திய பயணம்?

கொழும்பு, நவ. 18

குறைந்த விலையில் எரிபொருளை பெறுவது தொடர்பில் மத்திய கிழக்கின் மூன்று நாடுகளுடன் பேச்சு நடக்கிறது. இந்தப் பேச்சு வெற்றிகரமாக நிறைவடைந்தால் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தனது முதல் வெளிநாட்டு பயணமாக அந்த நாடுகளில் ஒன்றுக்கே செல்வார் என்று கூறப்படுகிறது.

இந்தத் தகவலை தென்னிலங்கை தரப்புகள் வெளிப்படுத்தியுள்ளன. உத்தியோகபற்றற்ற அந்த தகவலின்படி, ஜனாதிபதி பயணமாகும் இரண்டாவது 11

## ஐ. எம். எவ். பிரதிநிதிகள் நேற்று இலங்கை வந்தனர்!

கொழும்பு, நவ. 18

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ. எம். எவ்) பிரதிநிதிகள் குழு ஒன்று விரிவாக்கப்பட்ட கடன் வசதி தொடர்பான மூன்றாவது மீளாய்வுக்காக நேற்று நாட்டுக்கு வந்துள்ளது.

இவர்களின் வருகையின் பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் நான்காவது தவணை கடன் வசதி இலங்கைக்கு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

நாட்டின் பொருளாதாரத்தை மீட்பதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் நான்கு வருட 11

## வியாழனன்று ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரை!


கொழும்பு, நவ 18

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரின் ஆரம்பத்தில் அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் எதிர்வரும் 21ஆம் திகதி - வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவால் முன்வைக்கப்படும்.

அரசமைப்பின் 33 (அ) உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்ற கூட்டத்தொடர் ஒன்றின் ஆரம்பத்தில் அரசாங்கத்தின் கொள்கை பிரகடனத்தை பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கும் 11



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





நல்லூர் ஸ்ரீகமலாம்பிகா சமேத சிறீ கைலாசநாத சுவாமி திருக்கோவிலில் (நல்லூர் சிவன் கோயில்) ஐப்பசி கடைசி வெள்ளியை முன்னிட்டு இயம சம்ஹார உற்சவம் நடைபெற்றது. சிவபெருமான், மார்க்கண்டேயர் பொருட்டு இயமனை சம்ஹரித்து பின் உயிர்ப்பித்தருளிய நிகழ்ச்சி உற்சவமாக நடத்தப்பட்டது. (படங்கள் : ஐ.சிவசாந்தன்)

# தமிழ்த் தரப்புகள் இனியாவது இணைந்து செயல்பட வேண்டும்

## சட்டத்தரணி மணிவண்ணன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 18

தமிழ்த் தரப்புகள் இனியாவது ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். அதேவேளை, பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற தமிழ்த் தரப்புகளும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்று தமிழ் மக்கள் கூட்டணியின் விஸ்வலிங்கம் மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நேற்றையதினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"இடதுசாரிகளுக்கு என பண்பியல்வு இருக்கிறது. அவர்கள் தமக்கு ஏற்றவாறு சட்டங்களை மாற்றி தமது ஆட்சியை தக்க வைத்துக் கொண்டிருப்பார்கள். இதனை உணர்ந்த கொண்டு தமிழர் தரப்பு ஒற்றுமைப்பட வேண்டும்.

வடக்கையும் கிழக்கையும் பறிகொடுத்து விட்டு, எங்கள் மீது திணிக்கப்படப் போகும் தீர்வுகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படக்கூடும் என்பதனை உணர்ந்து கொண்டும், உள்ளூராட்சித் தேர்தல் மற்றும் மாகாண சபைத் தேர்தல்களிலும் தனித்து நின்றால் அவற்றினையும் தமிழர் தரப்பு பறிக்கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும். இதனை உணர்ந்து தமிழ்த் தரப்புகள் ஒற்றுமைப்பட வேண்டும். இதனை நாம் அழைப்பாக கூட விடுகின்றோம்.

தேர்தலில் தோற்றுப்போனவன் என இதனை பலர் எள்ளி நகையாடலாம். அவ்வாறில்லாமல் தமிழ்த் தலைமைகள் ஒன்றுபட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. பிளவுபட்ட தமிழர்களாக தொடர்ந்தும் இருக்க வேண்டுமென விரும்பவில்லை.

கூட்டு இப்படித்தான் இருக்க வேண்டும் என்று கூறவில்லை. ஆசன மோதல்களை கைவிட்டு தமிழ்த் தரப்பு ஒன்றிணைய வேண்டும். தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்து விட்டார்கள் என தமிழ் வாக்காளர்களை மலினப்படுத்த விரும்பவில்லை. பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றவர்களும் ஒண்றிணைந்து செயல்பட வேண்டும்.

பொதுக்கட்டமைப்பின் உடைவுக்கு, பொது அமைப்புகள் தான் பொறுப்பேற்க வேண்டும். அவர்கள் தான் உடைத்தார்கள். அதனைத் தொடர்ந்து கட்சித் தலைவர்களின் ஈகோ மற்றும் ஆசன பங்கீடும் காரணமாக அமைந்திருந்தது"- என அவர் மேலும் தெரிவித்தார். (எ- 05)



வேம்பிலிருந்து உற்பத்திகள்


# வடக்கு மாகாண ஆளுநருடன் புலம்பெயர் தமிழர் சந்திப்பு

யாழ்ப்பாணம், நவ. 18

வெப்ப மண்டலத்துக்குரியதான வேப்ப மரம் வடக்கு மாகாணத்தின் பல பாகங்களிலும் பரவலாகக் காணப்படுகின்றது. வட மாகாணத்தில் காணப்படும் வேப்ப மரங்களை மூல வளமாகப் பயன்படுத்தக் கூடிய வாய்ப்புகள் குறித்து ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனுடன் புலம்பெயர் தமிழர் சுந்தரமூர்த்தி புவனகுமார் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

இந்தியாவின் மும்பையை தலைமை அலுவலகமாகக் கொண்ட, உலக வேம்பு அமைப்பில் உறுப்புரிமை பெற்றுள்ள புவனகுமார், வேப்ப மரத்தைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யக் கூடிய சூழல் நேய உற்பத்திகள் தொடர்பான ஈடுபாட்டைக் கொண்டுள்ளார். வேப்பம் எண்ணெயிலிருந்தான மாதிரி உற்பத்திகள் பலவற்றை பரீட் சார்த்தமாக மேற்கொண்டுள்ள அவர் தனது உற்பத்திகள் தொடர்பில் ஆளுநருக்கு விளக்கமளிக்கப்பட்டது. வடமாகாணத்தில் வேப்ப மரங்களை இயற்கைச் சூழல்நேயமான வளமாகப் பயன்படுத்தி, பொருளாதார அபிவிருத்திக்குப் பயன்படுத்துவதற்கான சாத்தியங்கள் குறித்து இதன்போது கலந்துரையாடியதுடன், இலங்கையில், உலக வேம்பு அமைப்பின் ஒத்துழைப்புடன், வேப்ப மரத்தின் பலன்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கேற்ற செயல்பாட்டுத் திட்டமிடலைச் செய்து நடைமுறைப் படுத்துவதற்கான ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்வதற்கான கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டதாக புவனகுமார் குறிப்பிட்டார்.மேலும், ஆளுநருடனான கலந்துரையாடலில், சிறுதானிய பெறுமதிசேர் உற்பத்திகளில் ஈடுபட்டுவரும் சிவகுமார் நிரோசனும் கலந்துகொண்டார். (எ)

# மதத் தலைவர்களிடம் ஆசி பெற்றார் சிறீதரன்




யாழ்ப்பாணம், நவ. 18

இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பில் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்ட சிவஞானம் சிறீதரன், யாழ்ப்பாணத்திலுள்ள இந்து, கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ மதத்தலைவர்களை நேரில் சந்தித்து ஆசிபெற்றுள்ளார்.

நல்லை ஆதீன குருமுதல்வர் சிறீ ல சிறீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ்ப்பாணம் மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை, தென்னிந்திய திருச்சபையின் யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் பத்மதயாளன் அடிகளார் மற்றும் தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி. ஆறுதிருமுருகன் ஆகியோரை சந்தித்து ஆசி பெற்றதோடு, அடுத்தகட்ட அரசியல் செயல்பாடுகள் குறித்தும் கலந்துரையாடினார்.(எ)

# முல்லைத்தீவில் ரவிகரனுக்கு கௌரவிப்பு

முல்லைத்தீவு, நவ. 18

வன்னித் தேர்தல் மாவட்டத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற துரைராசா ரவிகரனை முல்லைத்தீவு மாவட்ட செவிப்புலனற்றோர் சங்கத்தினர் நேற்று கௌரவித்தனர்.

முல்லைத்தீவு - கள்ளப்பாட்டில் உள்ள ரவிகரனின் வீட்டில் இந்தக் கௌரவிப்பு நிகழ்வு நடைபெற்றது.

பாராளுமன்ற உறுப்பினராக தெரிவான ரவிகரனுக்குப் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டதுடன், வீட்டுச் சின்னமும், இலக்கம் மூன்றும் வடிவமைக்க நினைவுச்சின்னம் ஒன்றும் செவிப்புலனற்றோர் சங்கத்தினரால் இதன்போது [illegible] (எ)

# தேர்தல் முடிவை சவாலாக ஏற்று நாம் முன்னோக்கி செல்வோம்!

## டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 18

தேர்தல் முடிவுகளை சவாலாக ஏற்று முன்னோக்கிச் செல்வோம் என்று ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் உறுப்பினர்களுக்கு அந்தக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா நம்பிக்கையூடியுள்ளார்.

நடந்து முடிந்த தேர்தல் முடிவுகள் ஈ. பி. டி. பி. கட்சியின் அடுத்த கட்ட நகர்வுக்கு சிறந்த வலுவூட்டலை தந்துள்ளது. தேசிய நல்லிணக்கம் குறித்த தெளிவூட்டல் மக்களுக்கு சரிவர வழங்கப்படாமையும் எமது கட்சிக்கு எதிராக திட்டமிட்டு பரப்பட்ட அவதூறுகளுமே பின்னடைவுக்குக் காரணம் - என்றார்.

அத்துடன், இந்தத் தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவுக்கான காரணங்களை கட்சி செயல்பாட்டாளர்கள் ஒவ்வொருவரும் விமர்சனம், சுயவிமர்சனம் செய்து திருத்திக் கொள்வதன் மூலம் எதிர்காலத்தை நோக்கி இன்னமும் வலிமையுடன் பயணிக்க தயாராக வேண்டும் - என்றும் கூறினார்.

ஈ. பி. டி. பி. கட்சியின் அமைப்பாளர்கள் மற்றும் செயல்பாட்டளர்களை நேற்று அந்தக் கட்சியின் தலைமை பணிமனையில் சந்தித்து பேசிய போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
18.11.2024 திங்கட்கிழமை
பிலவ வருடம், கார்த்திகை 03

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# 'கௌரவ' உறுப்பினர்களும் கண்ணியமும்

கடந்த வாரத்தைய பாராளுமன்றத் தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட புதிய உறுப்பினர்களுக்கு பாராளுமன்ற நடைமுறைகள் தொடர்பாக மூன்று நாள் பயிற்சி கருத்தரங்கு அடுத்த வாரம் நடைபெறவிருக்கிறது.

பாராளுமன்றத் தேர்தல்களுக்கு பிறகு புதிய உறுப்பினர்களுக்கு இவ்வாறாக பயிற்சி கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்படுவது வழமையாகும். ஆனால், அண்மைய தசாப்தங்களாக சபைக்குள் பெரும்பாலான உறுப்பினர்கள் அடிக்கடி அடாவடித்தனங்களில் ஈடுபட்ட சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது அவர்கள் பயிற்சிக் கருத்தரங்குகளின் மூலமாக பாராளுமன்ற நடைமுறைகளில் எதையாவது கற்றுக் கொண்டதற்கான எந்த அறிகுறியையும் காணக்கூடியாதாக இருக்கவில்லை.

ஊழல் முறைகேடுகள் இல்லாத ஒரு புதிய அரசியல் கலாசாரத்தை தோற்றுவிக்கப் போவதாக வாக்குறுதி அளித்துக்கொண்டு ஆட்சியதிகாரத்துக்கு வந்திருக்கும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவின் தேசிய மக்கள் சக்திக்கு தென்னிலங்கையில் மாத்திரமல்ல, வடக்கு, கிழக்கு உட்பட நாடு பூராவும் இன, மத பேதமின்றி மக்கள் பிரமாண்டமான ஆணையை பாராளுமன்றத் தேர்தலில் வழங்கியிருக்கிறார்கள்.

பாராளுமன்றத்தை துப்புரவு செய்யும் 'சிரமதான தினமாக' நவம்பர் 21 ஆம் திகதியை கருதி வாக்களிக்குமாறு ஜனாதிபதி கேட்டுக் கொண்டார். அதற்கு இணங்க மக்கள் சிரமதானத்தை செய்து அதிக பெரும்பான்மையாக புதிய உறுப்பினர்களை பாராளுமன்றத்துக்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். புதிய கலாசாரத்தை தோற்றுவிக்கும் ஜனாதிபதியின் குறிக்கோளின் வெற்றியும் தோல்வியும் இந்த புதிய உறுப்பினர்களிலேயே தங்கியிருக்கிறது.

சபை நடவடிக்கைகளை பாடசாலை பிள்ளைகள் பார்வையிடுவதற்கு சபாநாயகர்கள் தடை விதிக்க நிர்ப்பந்திக்கப்பட்ட அளவுக்கு மக்கள் பிரதிநிதிகள் என்று சொல்லப்படுகின்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் காடைத்தனமாக நடந்துகொண்டயுகம் மாறி அறிவும் கண்ணியமும் கொண்ட உறுப்பினர்கள் நிறைந்ததாக புதிய பாராளுமன்றம் அமைய வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

குறுகிய காலத்தில் பெரும் பணம் பண்ணக்கூடிய ஒரு மார்க்கமாக அரசியலை பயன்படுத்தியவர்களை பெருமளவில் கொண்டிருந்த முன்னைய பாராளுமன்றங்களைப் போலன்றி புதிய பாராளுமன்றத்துக்கு தெரிவாகியிருப்பவர்கள் அரசியலை தூய்மையான ஒரு மக்கள் சேவையாக கருதி அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட வேண்டும். அதுவே, பழைய அரசியல்வாதிகளில் பெரும்பான்மையானவர்களை 'துடைத்தெறிந்த' மக்களின் எதிர்பார்ப்பாகும்.

புதிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பயிற்சிகளின்போது பொதுவெளியில் குறிப்பாக, சமூக ஊடகங்களில் எவ்வாறு கண்ணியமான முறையில் கருத்துகளை பகிர்ந்து கொள்ள வேண்டும் என்பதற்கான ஆலோசனைகளையும் வழங்கினால் பிரயோசனமாக இருக்கும். இதை இங்கு நாம் பிரத்தியேகமாகக் கூறுவதற்கான காரணத்தை அண்மைக்காலமாக குறிப்பாக தேர்தல் பிரசாரங்களின்போது சமூக ஊடகங்களை எவ்வாறு சில பிரகிருதிகள் பயன்படுத்தினார்கள் என்பதை அனுபவ ரீதியாக கண்டவர்கள் அறிவார்கள்.

கற்றறிந்தவர்கள் என்று தங்களைக் கூறிக் கொண்டு பாடசாலைக்கே சென்றறியாதவர்களிடம் இருக்கின்ற அளவு கண்ணியத்தைக்கூட கொண்டிராத 'ஒரு பிரகிருதியை' குடாநாட்டு மக்கள் இந்த தடவை பாராளுமன்றத்துக்கு அனுப்புகிறார்கள். மாதர்குலத்தை பற்றி பொதுவெளியில் எவ்வாறு பேச வேண்டும் என்ற அடிப்படை பண்புகூட இல்லாத இந்த பிரகிருதியை நாட்டின் அதியுயர் சட்டவாக்க சபைக்கான தங்கள் பிரதிநிதியாக தெரிவு செய்வதற்கு ஒரு கணிசமான எண்ணிக்கையான மக்கள் தீர்மானித்தமை எமது அரசியலினதும் சமூகத்தினதும் பண்பு சீரழிவுத்தனத்தின் தெளிவான வெளிப்பாடாகும்.

அதனால், புதிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாராளுமன்ற நடைமுறைகள் குறித்து மாத்திரமல்ல, மக்களின் 'கௌரவமான' பிரதிநிதிகளாக எவ்வாறு கண்ணியமாக பொதுவெளியில் நடந்துகொள்ளவேண்டும் என்பது குறித்தும் பயிற்சிகளை வழங்கவேண்டியது அவசியம் என்று சம்பந்தப்பட்ட பாராளுமன்ற அதிகாரிகளிடம் 'ஈழநாடு' கேட்டுக்கொள்கிறது.

இலங்கையில் பாராளுமன்ற உறுப்பினர்களை 'கௌரவ உறுப்பினர்கள்' என்று அழைப்பது தொடர்பாக காலஞ்சென்ற வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் லண்டன் வெஸ்ட்மினிஸ்டரில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றியவேளை கூறிய கருத்தொன்றை இங்கு நினைவுபடுத்துவது தருண பொருத்தமானதாகும்.

'இலங்கையில் பாராளுமன்ற உறுப்பினர்களை நாம் கௌரவ உறுப்பினர்கள் என்று அழைக்கிறோம். ஆனால், அவர்களில் பெருமளவானவர்கள் கௌரவமானவர்களாக இல்லை. ஆனால், ஐக்கிய இராச்சியத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களை கௌரவ உறுப்பினர்கள் என்று அழைப்பதில்லை. ஆனால், அவர்களில் பெருமளவானவர்கள் கௌரவமானவர்களாக இருக்கிறார்கள்.'

## வடமாகாண மரநடுகை மாதம்
## கார்த்திகை - 2024



"இந்த உலகத்தில் அழகானது எதுவுமே இல்லை என்று ஒருபோதும் சொல்லாதீர்கள். எப்போதும் உங்களை ஆச்சரியப்படுத்தும் அளவுக்கு ஒரு மரத்தின் தோற்றத்தில், ஒரு இலையின் அசைவில் ஏதோவொன்று இருக்கும்"

- அல்பேட் சுவைற்சர் (பிரான்ஸ் தத்துவவியலாளர் - சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவர்)

# மகத்தான தேர்தல் வெற்றியை தொடர்ந்து நீதிக்கும் நல்லிணக்கத்துக்கும் முன்னுரிமை கொடுக்கவேண்டும்

## அரசாங்கத்திடம் தேசிய சமாதான பேரவை கோரிக்கை



ශ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
இலங்கை தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

மகத்தான தேர்தல் வெற்றியை தொடர்ந்து நீதிக்கும் நல்லிணக்கத்துக்கும் முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று தேசிய சமாதான பேரவை ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவிடமும் அவரின் அரசாங்கத்திடமும் வலியுறுத்திக் கேட்டிருக்கிறது.

இது தொடர்பாக அதன் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா வெளியிட்டிருக்கும் ஊடக அறிக்கையில் கூறப்பட்டவை வருமாறு,

பாராளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வெற்றியை பெற்றதை முன்னிட்டு ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் தேசிய சமாதானப் பேரவை அதன் வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறது. இந்த பிரமாண்டமான ஆணை பொருளாதார அபிவிருத்தி, நீதி மற்றும் நல்லிணக்கத்தை நோக்கி நாட்டை வழிநடத்துவதில் ஜனாதிபதி மீதும் அவரது கட்சி மீதும் மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கையை பிரதிபலிக்கிறது.


இன, மத சிறுபான்மைச் சமூகங்கள் பெரும்பான்மையினராக வாழும் பகுதிகள் உட்பட நாட்டின் சகல பிராந்தியங்களையும் தழுவியதாக அரசாங்கத்துக்கு கிடைத்திருக்கும் பரந்தளவிலான ஆதரவு தேசிய ஐக்கியத்தை நோக்கிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு படியாக அமைகிறது. ஜனாதிபதியின் தலைமைத்துவம் இன, மத பிளவுகளை இணைத்திருப்பதன் ஓர் அறிகுறியாக இதை தேசிய சமாதான பேரவை கருதுகிறது. முன்னென்றும் இல்லாத வகையிலான இந்த நல்லெண்ணத்தின் பின்புலத்தில், நாட்டின் நீண்டகால இனநெருக்கடிக்கு தீர்வைக் காண்பதற்கு முன்னுரிமை கொடுக்குமாறு தேசிய சமாதான பேரவை கேட்டுக் கொள்கிறது.

தேசிய மக்கள் சக்தி உண்மையான ஒரு தேசிய நோக்கையும் அணுகுமுறையையும் அடைந்திருப்பதாக நாம் நம்புகிறோம். இந்த அம்சத்தை நீண்டகால பிரச்னைகளுக்கு தீர்வுகளை காண்பதன் மூலமாக வலுப்படுத்த வேண்டியது அத்தியாவசியமானதாகும். மக்களுக்கு சொந்தமான நிலங்களை திருப்பிக் கையளிப்பது, அதிகாரங்களை பகிர்வது, பரவலாக்குவது, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவமயநீக்கத்தை செய்வது, காணாமல் ஆக்கப்பட்டவர்களினதும் சிறையிலடைக்கப்பட்டிருப்பவர்களினதும் விவகாரங்களை கையாளுவது என்று பல்வேறு பிரச்னைகள் இதில் அடங்கியிருக்கின்றன.

நாட்டின் வரலாற்றில் புதியதோர் அத்தியாயத்தில் அரசாங்கம் பிரவேசிக்கும் நிலையில், பொருளாதார சவால்களைக் கையாள்வதுடன் சகல குடிமக்களுக்குமான நீதியையும் நல்லிணக்கத்தையும் சமாதானத்தையும் அடைவதில் அரசாங்கம் வெற்றிபெற வேண்டும் என்று தேசிய சமாதான பேரவை விரும்புகிறது.

நிலைபேறான ஓர் அரசியல் தீர்வுக்கு சிவில் சமூகத்தின் பங்கேற்பும் சகல சமூகங்களினதும் இணக்கமும் எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பும் அவசியமாகும். பரந்தளவு ஆதரவுடனான அத்தகைய ஒரு தீர்வு நிலைபேறான சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் வரவிருக்கும் சந்ததிகளுக்கு உறுதிசெய்யும்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவம்பர் -18 திங்கட்கிழமை
குரோதி வருடம் - கார்த்திகை 03
நல்ல நேரம் : 6.00 - 7.30
ராகு காலம் : 7.30 - 9.00
திதி : திரிதியை




**மேடம்**
குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். நவீன மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள். உறவினர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். பாதியில் நின்ற வேலைகள் முடியும்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் உடல் அசதி மனச்சோர்வு வந்து நீங்கும். சிலர் உங்களை தாழ்த்திப் பேசினாலும் கலங்காதீர்கள். கொடுத்துச் செல்ல வேண்டிய நாள்.

**மிதுனம்**
குடும்பத்தை பற்றிய கவலைகள் வந்து நீங்கும். வாகனம் அடிக்கடி செலவு வைக்கும். யாருக்கும் சாட்சி கையெழுத்திட வேண்டாம். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள்.

**கடகம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். நம்பிக்கை குறையும். பாராட்டப்படுவீர்கள். சிறப்பான நாள்.

**சிம்மம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். வாகன வசதிப் பெருகும். விருந்தினர் வருகையால் வீடு களைக் கட்டும். சாதிக்கும் நாள்.

**கன்னி**
கணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**துலாம்**
சந்திராஷ்டம் இருப்பதால் அனாவசிய பேச்சை தவிர்ப்பது நல்லது. சந்தேகப் புத்தியால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும். உதவி செய்யப் போய் உபத்திரவத்தில் சிக்கிக் கொள்ளாதீர்கள்.

**விருட்சிகம்**
கணவன்-மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். மனைவி வழியில் அந்தஸ்து உயரும். கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**தனுசு**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். பயணங்களால் மகிழ்ச்சி தங்கும். தொட்டது துலங்கும் நாள்.

**மகரம்**
புதிய திட்டங்கள் நிறைவேறும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்தியோகம் குறித்து யோசிப்பீர்கள். சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். கனவு நனவாகும் நாள்.

**கும்பம்**
முக்கிய பிரமுகர்களை சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். வெளிவட்டாரத் தொடர்புகள் அதிகரிக்கும். பால்ய நண்பர்கள் உதவுவார்கள். உயரும் நாள்.

**மீனம்**
திட்டவட்டமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். அரசால் ஆதாயம் உண்டு. புது வாகனம் வாங்குவீர்கள்.

# புலம்பெயர் தேசத்தில் வாழும் உறவுகள் நாட்டை முன்னேற்ற முன்வர வேண்டும்

## இளங்குமரன் அழைப்பு



யாழ்ப்பாணம், நவ. 18

"எமக்கு கிடைத்த வெற்றி மக்களுக்கு கிடைத்த வெற்றியாகும். புலம்பெயர் தேசத்தில் இருக்கின்ற உறவுகள் ஒன்றிணைந்து எமது நாட்டினை முன்னேற்றுவதற்கு முன்வர வேண்டும்"- இவ்வாறு தேசிய மக்கள் சக்தி சார்பில் யாழ். தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராக தெரிவான இளங்குமரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எமக்குக் கிடைத்த வெற்றி என்பது மக்களுக்கு கிடைத்த பெரும் வெற்றியாகவே கருதப்பட வேண்டும். ஏனென்றால் இதுவரை காலமும் இருந்த அரசியல்வாதிகள் மீது மக்களுக்கு ஏற்பட்டிருந்த வெறுப்பின் காரணமாகவும், அவர்களது பொறுப்பற்ற செயல்பாடுகள் காரணமாகவும், அரசு நிறுவனங்களை வினைத்திறனின்றி இயக்கியதன் காரணமாகவும், ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை இந்த நாட்டில் இன ஐக்கியத்தை ஏற்படுத்துவார் என்ற நம்பிக்கையுடனும் மக்கள் வாக்குகளை பதிவு செய்துள்ளனர்.

இந்தத் தேர்தலில் எமக்கு பல தொழிற்சங்கங்கள் உதவி செய்திருக்கின்றன. அந்த தொழிற்சங்கங்களுக்கும் மக்களுக்கும் நன்றி கூற கடமைப்பட்டிருக்கின்றோம்.

புதிய ஒரு யுகத்தை படைத்து, வளமான ஒரு சூழலை உருவாக்கி, தொழிற்துறையை உருவாக்கி யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டத்தை அபிவிருத்தி செய்து இளைஞர்களிடம் கையளிப்போம்.

இதற்கு புலம்பெயர் தேசத்தில் இருக்கின்றவர்கள் உதவி செய்வதற்கு முன்வர வேண்டும். இன்று வெளி நாட்டு உதவி இல்லாத யாழ்ப் பாணம் என்பது பூஜ்ஜியமாக காணப்படுகிறது. வெளிநாட்டு உதவிகளின் நிமித்தம்தான் பலர் இயங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

அந்தவகையில் தொழிற்சாலைகளை நிறுவி, வடக்கு - கிழக்கில் தமிழ் மொழிக்கு முன்னிலை கொடுத்து, நாங்கள் ஓர் இன ஐக்கியத்துடன் நாட்டைக் கட்டியெழுப்ப அனைத்துத் தரப்பினரும் முன் வர வேண்டும்"- என்றார்.

(எ -05)

# கிணற்றில் வீழ்ந்து 8 வயது சிறுவன் பலி

வவுனியா, நவ. 18

வவுனியா கள்ளிக்குளம் பகுதியில் 8 வயது சிறுவன் கிணற்றினுள் தவறி வீழ்ந்து உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

குறித்த சிறுவன் கிணற்றுப்பகுதிக்கு சென்று தண்ணீர் அள்ளியபோது தவறி உள்ளே வீழ்ந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

உறவினர்களால் சிறுவன் மீட்கப்பட்ட போதும் அவன் ஏற்கனவே உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் கள்ளிக்குளம் பகுதியைச் சேர்ந்த க. டிலக்சன் என்ற 8 வயது சிறுவனே உயிரிழந்தார்.

இது தொடர்பில் ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(எ)

# பசுமை அரசியலை வீறுடன் முன்னெடுக்கும் உத்வேகத்தை இத்தேர்தல் வழங்கியிருக்கிறது

## ஐங்கரநேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ. 18

பாராளுமன்றத் தேர்தலில் சுயேச்சை அணியாகப் போட்டியிட்ட நாம் பாராளுமன்ற ஆசனத்தை வெல்ல முடியாதபோதும் மக்கள் எமக்குக் கணிசமான வாக்குகளை வழங்கியிருக்கிறார்கள்.

படைபலம், பணபலம், பன்னாட்டு நிறுவனங்களின் பின்புலம் எதுவுமில்லாத சாமானியர்களின் கட்சியான எமக்குத் தென்னிலங்கை அரசியல் சூறாவளி இங்கு ஏற்படுத்தியிருக்கும் அலைகளின் மத்தியிலும் மக்கள் 7,496 வாக்குகளை வழங்கியிருக்கிறார்கள்.

இது தமிழ்த் தேசியத்தில் பசுமை அரசியலை வீறுடன் முன்னெடுக்கும் உத்வேகத்தை எமக்கு வழங்கியிருக்கிறது என்று தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம், சனநாயகத் தமிழ் அரசுக் கட்சியுடன் இணைந்து பாராளுமன்றத் தேர்தலில் சுயேச்சையாக மாம்பழம் சின்னத்தில் போட்டியிட்டிருந்தது. இத்தேர்தல் முடிவுகள் தொடர்பில் ஐங்கரநேசன் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் சுயேச்சையாகத் தேர்தலை எதிர்கொண்டபோதும், தேர்தல்களின்போது மாத்திரம் தோன்றி மறையும் மழைக் காளான் சுயேச்சைகள் அல்லர் நாம். மாறாக, நாம் இந்த மண்ணில் நிலையாகக் காலூன்றிச் சமூக, அரசியற் செயற்பாடுகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகின்ற ஓர் பசுமைக் கட்சி ஆகும்.

உலக நாடுகளில் சூழல்சார் அரசியல் காத்திரமான முடிவுகளை மேற்கொள்ளும் வகையில் பசுமைக் கட்சிகள் உருவாகி, பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவங்களைக் கொண்டிருக்கின்றன. ஆனால், பேரினவாதம் கோலோச்சும் இலங்கையில் சூழலியல் வாதம் இன்னமும் கண்டுகொள்ளப்படாமலேயே உள்ளது.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் தேசியத்தையும் சூழலியத்தையும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாத கோட்பாடுகளாகக் கருதியே பயணித்து வருகின்றது. தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகளில் சில அணிந்திருக்கும் போலித்தேசிய முகமூடிகளும், கட்சிகளின் உள்ளே நிலவும் எதேச்சதிகாரமும் ஜனநாயக மறுப்பும், அவற்றின் சூழலியம் பற்றிய ஆழமான புரிந்துணர்வின்மையும் எம்மைத் தனிவழி பயணிக்க வைத்திருக்கிறது-

என்று அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# யாழில் ஹெரோயினுடன் இளைஞன் கைது!

யாழ்ப்பாணம், நவ. 18

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எல். சூரியபண்டாரவின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்று முன்தினம் ஹெரோயினுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய் யப்பட்டுள்ளார்.

கொக்குவில் குளப்பிட்டி பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 120 மில்லி கிராம் ஹெரோயினுடன் 28 வயது இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-05)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றில் இம்முறை தேர்தலிலேயே அதிகளவில் பெண் எம். பிக்கள் தெரிவு!

கொழும்பு, நவ. 18

**நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தல் ஊடாக இம் முறை அதிக எண்ணிக்கையிலான பெண்கள் பாராளு மன்றத்துக்குத் தெரிவாகினர். இவர்களில் பெரும்பாலா னவர்கள் தேசிய மக்கள் சக்தியின் ஊடாக தெரிவானமை சுட்டிக்காட்டத்தக்கது.**

இலங்கை பாராளுமன்றத் துக்குத் தெரிவான முதல் பெண் என்ற பெருமையை அடெலின் மொலமுரே பெற்றுள்ளார். அவர் 1931 ஆம் ஆண்டில் அப் போதைய சட்டமியற்றும் சபை யாக இருந்து அரசாங்க சபைக் குத் தெரிவாகியிருந்தார்.

இலங்கை ஜனநாயக குடியர சில் 1989 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை பாரா ளுமன்றத்தில் பெண்களின் பிர திநிதித்துவம் 6 சதவீதத்தை விஞ்சாத அளவிலேயே இருந்து வந்தது.

இலங்கை வரலாற்றில் பாராளுமன்றத்துக்கு அதிகளவு பெண் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்ட ஆண்டுகளாக 1989, 2004 மற்றும் 2010ஆம் ஆண்டுகளை குறிப்பிடலாம்.

குறித்த வருடங்களில் தலா 13 பெண் பிரதிநிதிகள் பாராளு மன்றத்துக்கு தெரிவாகியிருந் தனர். அத்துடன், 2020ஆம் ஆண்டு இடம்பெற்ற பாராளு மன்றத் தேர்தல் ஊடாக 9 ஆவது பாராளுமன்றத்துக்கு 12 பெண் பிரதிநிதிகள் தெரிவாகி யிருந்தனர்.

இதனிடையே இம்முறை இடம்பெற்ற பொதுத் தேர்த லில் 21 பெண் பிரதிநிதிகள் பாராளுமன்றத்துக்கு தெரிவா கியுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)

# தேர்தல் செலவு அறிக்கை சமர்ப்பிக்காத வேட்பாளர்களுக்கு எதிராக நடவடிக்கை

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, நவ. 18

தேர்தல் செலவு அறிக்கையை சமர்ப்பிக்காத அனைத்து வேட் பாளர்களுக்கும் எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரி வித்துள்ளது.

தேர்தல் செலவுகள் ஒழுங்கு முறை சட்டத்தின்படி, தேர்தல் நிறைவடைந்த 21 நாட்களுக் குள் அனைத்து செலவு அறிக் கைகளையும் தேர்தல்கள் ஆணைக்குழுவில் சமர்ப்பிக்க வேண்டும்.

பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்க ளைச் சேர்ந்த 8 ஆயிரத்து 888 வேட்பாளர்கள் பொதுத் தேர் தலில் போட்டியிட்டனர்.

இந்நிலையில் தேர்தல் செலவு அறிக்கையை சமர்ப்பிக் குமாறு வேட்பாளர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இது தவிர, வேட்பாளர்கள் சொத்து பொறுப்பு அறிக்கை ளையும் சமர்ப்பிக்க வேண்டும். தேர்தல் செயல்பாட்டில் வெளிப்படைத்தன்மையை உருவாக்கவும் ஏனைய வேட் பாளர்களுக்கு அநீதி இழைக் கப்படுவதை தடுக்கும் நோக் கிலும் செலவின அறிக்கை சட்டம் உள்ளது. (ஐ)

# ரூ. 14,500 கோடி பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் ஏலம்

கொழும்பு, நவ. 18

14 ஆயிரத்து 500 கோடி ரூபாய் பெறுமதியான திறை சேரி உண்டியல்கள் எதிர்வரும் 20ஆம் திகதி ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்பட வுள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன்படி, 91 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 5 ஆயிரம் கோடி ரூபாய் பெறும தியான திறைசேரி உண்டியல் களும், 182 நாட்கள் முதிர்வுக் காலத்தை கொண்ட 6 ஆயிரத்து 500 கோடி ரூபாய் பெறுமதி யான திறைசேரி உண்டியல் களும் ஏல விற்பனையினூடாக வழங்கப்படவுள்ளன.

மேலும் 364 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 3 ஆயிரம் கோடி ரூபாய் பெறும தியான திறைசேரி உண்டியல் களும் ஏல விற்பனையினூடாக வழங்கப்படவுள்ளன என்ற மத்திய வங்கி அறிவித்துள்ளது. (ஐ)

# ஹாட்லியின் மைந்தர்களின் 25ஆவது நினைவேந்தல்!

வடமராட்சி நவ. 18

ஹாட்லியின் மைந்தர்களின் 25ஆவது ஆண்டு நினைவேந் தல் நேற்று வடமராட்சி - இன்பசிட்டி கடற்கரையில் நேற்று நினைவேந்தப்பட்டது.

பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியின் 2000ஆம் ஆண்டு உயர்தர வகுப்பு மாணவர்க ளான பூரணமூர்த்தி - சுந்தர வன், சிவநாதன் - இரவிசங்கர், சுந்தரலிங்கம் - சிவோத்தமன், பாலகிருஸ்ணன் - பிரதீபன் ஆகியோர் கடந்த 1999 நவம்பர் 17ஆம் திகதி இன்பசிட்டி கடலில் கடல்வள ஆராய்ச்சி யில் ஈடுபட்டிருந்தபோது உயிரிழந்தனர். இதேபோன்று, பேராதனை பல்கலைக்கழகத் தில் கல்விகற்றபோது ரயில் விபத்தில் உயிரிழந்த மரிய ரட் ணம் - குணரட்ணதின் 20ஆவது ஆண்டு நினைவுதினமும்



அனுஷ்டிக்கப்பட்டது.

கடற்கரையில் உயிரிழந்த மாணவர்களின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டு படை யிலிட்டு, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ் வில் மாணவர்களின் குடும்பத்தி னர், அவர்களின் நண்பர்கள், உறவினர்கள், ஹாட்லி கல்லூரி அதிபர் த.கலைச்செல்வன் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

ஹாட்லியின் மைந்தர்களின் நினைவாக இன்று திங்கட் கிழமை காலை 9 மணிக்கு பாட சாலை மண்டபத்தில் இரத்த தான முகாம் நடைபெறவுள் ளது. (ஐ-02)

# தேசிய பட்டியல் மூலமாக தினேஷ், ரவி எம். பியாவர்?

கொழும்பு, நவ. 18

புதிய ஜனநாயக முன்னணி யின் தேசியப் பட்டியல் உறுப் பினர்களாக முன்னாள் பிரதமர் தினேஷ் குணவர்த்தன, ரவி கருணாநாயக்க ஆகியோரை நியமிக்க தீர்மானிக்கப்பட்டுள் ளதாகக் கூறப்படுகின்றது.

நடந்து முடிந்த பாராளுமன் றத் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணி சார்பில் மூவர் எம். பிக்களாகத் தெரிவாகினர். தேசியப் பட்டியல் மூலமாக இருவரை நியமிக்க சந்தர்ப்பம் கிடைத்தது. இந்த இடங்களுக்கே இருவரும் நியமிக்கப்பட வாய்ப்புள்ளது.

புதிய ஜனநாயக முன்னணி ரவி கருணாநாயக்கவால் பதிவு செய்யப்பட்டுள்ளது. முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங் கவை தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினராக நியமிப்பது தொடர்பில் எதிர் காலத்தில் தீர்மானிக்கப்படும் என்றும் கூறப்பட்டது. (ஐ)

# திலித் ஜயவீரவும் எம். பியாகிறார்!

கொழும்பு, நவ. 18

சர்வஜன கட்சியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப் பினராக கட்சியின் அந்தக் கட் சியின் தலைவர் திலித் ஜயவீரவை நியமிக்க சர்வஜன அதிகாரத்தின் செயல்குழு நேற்றைய தினம் தீர்மானித்தது.

அத்துடன், குறித்த தீர்மா னத்தை தேர்தல்கள் ஆணைக்கு முவுக்கு அறிவிக்கவுள்ளதாகவும் கட்சியின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி ரஞ்சன் செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

# போதைப்பொருளுடன் சந்தேகநபர் கைதானார்

கொழும்பு, நவ. 18

கம்பஹா - பேலியகொடை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வனவாசல பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைதானார்.

பேலியகொடை பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலை யடுத்து மேற்கொண்ட சுற்றி வளைப்பின்போதே இவர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் வத்தளை பிர தேசத்தைச் சேர்ந்த 27 வயது டையவராவார். கைது செய்யப் பட்டவரிடமிருந்து 10 கிராம் 500 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் பொலிஸா ரால் கைப்பற்றப்பட்டது. (ஐ)

# பொது பயன்பாடுகள் குழுவுக்கு புதிய உறுப்பினர்கள் நியமனம்!

கொழும்பு, நவ. 18

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் புதிய உறுப் பினர்களுக்கு அரசமைப்பு பேரவை அனுமதி வழங்கியுள் ளது.

அரசமைப்பு பேரவை வெள் ளிக்கிழமை இரவு கூடிய போதே இந்த அனுமதி வழங்கப்பட் டுள்ளது.

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவில் 5 உறுப்பி னர் கள் அங்கம் வகிக்கின்றனர். பேராசிரியர் கே. பீ. எல். சந்திரலால், பேராசிரியர் டபிள்யூ. பீ. ஏ. றொட்ரிகோ, கலாநிதி எம். பீ. எஸ். பெர்ணான்டோ, பீ. ஹேன்நாயக்க மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி விக்கும் களுஆராச்சி ஆகியோரே புதிதாக அந்தக் குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# நுகர்வோர் அதிகார சபையின் விசாரணை பிரிவு கலைப்பு!

கொழும்பு, நவ. 18

நுகர்வோர் விவகார அதி கார சபையின் விசாரணைப் பிரிவின் தலைவர் நீக்கப்பட்டு, அந்தப் பிரிவும் கலைக்கப்பட் டுள்ளது.

கடந்த அரசாங்கம் நுகர் வோர் விவகார அதிகார சபை யில் சட்டத்துக்கு முரணான வகையில் விசாரணை பிரிவின் தலைவர் ஒருவரை நியமித்தமை கண்டுபிடிக்கப்பட்டதை யடுத்து அந்த பிரிவு கலைக்கப் பட்டதாக நுகர்வோர் விவகார அதிகார சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நிதியமைச்சு மற்றும் முகா மைத்துவ சேவைகள் திணைக் களத்தின் அனுமதியின்றியே குறித்த நியமனங்கள் வழங்கப் பட்டுள்ளதாக குறிப்பிடப்படு கின்றது.

குறித்த நியமனம் தொடர் பில், நுகர்வோர் அதிகார சபை யின் தற்போதைய தலைவர், முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் கேட்ட போது, அவ்வாறான நியமனத் துக்கு அனுமதி வழங்கப்பட வில்லை என்பது தெரியவந் துள்ளது.

அத்துடன், நுகர்வோர் விவகார அதிகார சபைக்கு நியமிக்கப்பட்ட ஊடக அதி காரியும் தற்போதைய தலை வரால் நீக்கப்பட்டுள்ளார். முன்னாள் வர்த்தக அமைச்சர் தன்னிச்சையாக இந்த நியம னத்தை வழங்கியமை உறுதி யாகியுள்ளது.

இதற்கமைய, குறித்த நியம னம் தொடர்பில் தற்போதைய தலைவர் விசாரணைகளை ஆரம்பித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# விபத்தில் ஒருவர் பலி!

கொழும்பு, நவ. 18

முச்சக்கரவண்டியும் மோட் டார் சைக்கிளும் மோதிய விபத் தில் ஒருவர் உயிரிழந்தார். காலி - பலப்பிட்டி - அஹுங்கல்ல பகுதியில் நேற்று இந்த விபத்து இடம்பெற்றது.

இந்த விபத்தில் 27 வயது நபரே உயிரிழந்தார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் அஹுங்கல்ல பொலிஸார் ஈடுபட்டு வருகின்ற னர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வருவோரின் பாதுகாப்பில் அமெரிக்காவின் பங்களிப்பு இருக்கும்!

## அமெரிக்க தூதரகம் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 18

**இலங்கையர்கள் மற்றும் இலங்கை வரும் ஏனைய நாட்டவர்களின் பாதுகாப்பு விடயத்தில் அமெரிக்காவின் பங்களிப்பு வலுவானதாக இருக்கும். அறுகம் குடா சம்பவத்தை போன்று கடுமையான பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள அரசாங்கத்துடன் இணைந்து உறுதுணையாக செயல்படும் என்று அமெரிக்க தூதரகத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.**

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கையின் தென்கிழக்கு பகுதியில் உள்ள அறுகம் குடா பகுதியில் வெளிநாட்டவர்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சுறுத்தல் குறைவடைந்த நிலையில் உடனடியாக பயண கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டது.

எனினும், ஈரான் புரட்சிகர காவல் படையுடன் இணைந்து செயல்பட்ட ஆப்கானிஸ்தான் பிரஜையான பர்ஹாத் ஷகேரி குறித்து விசாரணைகளை முன்னெடுத்திருந்த அமெரிக்க நீதிமன்றம், ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ள டொனால்ட் ட்ரம்ப் மீதான கொலை சதி உள்ளிட்ட மேலும் இரு சந்தேக நபர்கள் தொடர்பான மேலதிக தகவல்கள் விசாரணைகளின் முன்னேற்றத்தில் கிடைக்கப் பெற்றன.

அமெரிக்க பாதுகாப்பு தரப்பினரிடம் சந்தேக நபர்கள் வழங்கிய தகவல்களின் பிரகாரமே இலங்கையில் இஸ்ரேலியர்கள் மீது தாக்கதல் நடத்தும் திட்டம் கண்டறியப்பட்டது.

அடுத்த கட்டமாக இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகம் ஊடாக இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

தற்போது ஏற்பட்டுள்ள பாதுகாப்பு முன்னேற்றங்களின் அடிப்படையில் அறுகம் குடா குறித்து ஒக்ரோபர் 23ஆம் திகதி வெளியிட்ட பயண எச்சரிக்கையை அமெரிக்க தூதரகம் விலக்கிக் கொண்டுள்ளது.

அமெரிக்க பிரஜைகள் அனைவரும் இலங்கைக்கான பயண எச்சரிக்கையை மீளாய்வு செய்ய வேண்டும்.

தங்கியிருக்கும் சுற்றுச்சூழல் குறித்து தெரிந்து சந்தேகத்திற்கு இடமான நடவடிக்கைகள் குறித்து உள்ளூர் அதிகாரிகளுக்கு தெரிவிக்க வேண்டும். பாதுகாப்பற்ற நிலையை உணர்ந்தால் அங்கிருந்து வெளியேற வேண்டும்.

இலங்கையர்கள் மற்றும் இலங்கை வரும் ஏனைய நாட்டவர்களின் பாதுகாப்பு விடயத்தில் அமெரிக்காவின் பங்களிப்பு வலுவானதாக இருக்கும். இத்தகைய கடுமையான பாதுகாப்பு அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள அரசாங்கத்துடன் இணைந்து உறுதுணையாக செயல்படும் - என்றார். (ஐ)

# பரீட்சை கண்காணிப்பாளர்கள் கைபேசி எடுத்துச் செல்ல தடை!

கொழும்பு, நவ. 18

க. பொ. த. உயர்தர பரீட்சை நடைபெறும் பரீட்சை நிலையங்களுக்குள் உதவி அதிபர் உட்பட கண்காணிப்பு ஆசிரியர்களுக்கு கைபேசிகளை எடுத்துச் செல்லத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பரீட்சை மையத்தின் நிலைய அதிகாரி மற்றும் மேலதிக கண்காணிப்பாளர் மட்டுமே கைபேசிகளை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

கடந்த காலங்களில் எழுந்த பிரச்னைகள் காரணமாக, இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், பரீட்சை காலத்தில் தேர்வு கண்காணிப்பும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, பரீட்சை திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக, மாகாண மற்றும் பிராந்திய அலுவலகங்களின் அதிகாரிகளும் கண்காணிப்புக்கு ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

ஒரு கண்காணிப்பாளர் 15 நாட்களில் 20 பரீட்சை மையங்களை கண்காணிக்க வேண்டும். (ஐ)

# பொரளை விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, நவ. 18

காரும் மோட்டார் சைக்கிளும் மோதிய விபத்தில் ஒருவர் சம்பவம் இடத்திலேயே உயிரிழந்தார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பு - பொரளை மயானத்துக்கு அருகில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நாரஹேன்பிட்டியிலிருந்து கித்துல்வத்தை வீதியை நோக்கி சென்றுகொண்டிருந்த காரே மோட்டார் சைக்கிள் மீது மோதியுள்ளது. இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்தி சென்ற, பொரளை சீவலிபுர பிரதேசத்தை சேர்ந்த நபரே உயிரிழந்தார்.

காரில் பயணித்த இருவரில் ஒருவர், விபத்து நேர்ந்தவுடன் காரில் பொருத்தப்பட்டிருந்த கமெராவை அகற்றிவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

கார் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# பெண்கள் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க மக்கள் அங்கீகாரம்!

## தேசிய மக்கள் சக்தி

கொழும்பு, நவ. 18

நாட்டன் வாக்காளர்கள், சபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் சித்தாந்தத்தை மதித்து அங்கீகரித்துள்ளனர் என்று தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினராக தெரிவான நிலாந்தி கோட்டஹாச்சி தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் அவர் செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்துள்ளார்.

ஒரு நாட்டின் சட்டங்களும் கொள்கைகளும் தொகுக்கப்படும் இடம் பாராளுமன்றமாகும். அத்துடன், பொருளாதாரம் மற்றும் சர்வதேச சமூகத்தின் மத்தியில் நாட்டின் தலைவிதியை தீர்மானிக்கும் இடமும் பாராளுமன்றம்.

இந்தநிலையில், பாராளுமன்றத்திலும், உள்ளூராட்சி மட்டத்திலும் கூட அதிகமான பெண்களை பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும் என்ற சித்தாந்தம் இருந்து வந்தது. இந்த சித்தாந்தத்தை இலங்கை மக்கள் இந்த ஆண்டு பொதுத் தேர்தலில் அங்கீகரித்து, அதிக பெண்களை பாராளுமன்றத்துக்கு தேர்ந்தெடுத்துள்ளனர் - என்றார். (ஐ)

# விடுமுறையில் சென்றவர்கள் திரும்புவதற்கு விசேட ரயில்கள்!

கொழும்பு, நவ. 18

பொதுத் தேர்தல் மற்றும் நீண்ட வார விடுமுறை முடிந்து பணியிடங்களுக்கு வரும் பயணிகளுக்காக சில சிறப்பு ரயில்கள் இயக்கப்படுகின்றன என்று புகையிரத திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்றைய தினம் இயக்கப்பட்ட இந்த சிறப்பு ரயில்கள் இன்று திங்கட்கிழமையும் இயக்கப்படும் என்று புகையிரதத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கொழும்பு - கோட்டையிலிருந்து பதுளை வரையிலும், பதுளையிலிருந்து கொழும்பு - கோட்டை வரையிலும், கண்டியில் இருந்து கொழும்பு - கோட்டை வரையிலும், பெலியத்தையிலிருந்து கொழும்பு கோட்டை வரையிலும் விசேட ரயில் சேவைகள் இயங்குகின்றன.

அத்துடன், கொழும்பு கோட்டையிலிருந்து ஹிக்கடுவை வரையிலும், மாத்தறையில் இருந்து கொழும்பு கோட்டை வரையிலும், காலியில் இருந்து கொழும்பு கோட்டை வரையிலும் விசேட ரயில் சேவைகள் இடம்பெறவுள்ளன.

இதேவேளை பொதுத் தேர்தலில் வாக்களிப்பதற்காக தமது சொந்த இடங்களுக்கு சென்றவர்கள் மீண்டும் கொழும்பு வருவதற்காக மேலதிக பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இலங்கை போக்குவரத்து சபையின் தலைவர் ரமல் சிறிவர்தன இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த விசேட பேருந்து சேவைகள் நாளை வரை நடைமுறைப்படுத் தப்படவுள்ளதாக அவர்குறிப்பிட்டார்.

பொதுத் தேர்தலுக்காக அதிகளவான மக்கள் சென்ற பகுதிகளுக்குக் கொழும்பிலிருந்து மேலதிகமாக பேருந்துகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன - என்றும் குறிப்பிட்டார். (ஐ)

# ஆசிரியைகள் இருவரால் தாக்கப்பட்ட மாணவி சிகிச்சை பலனின்றி மரணம்!

கொழும்பு, நவ. 18

ஆசிரியைகள் இருவரால் தாக்கப்பட்ட மாணவி ஒருவர் சிகிச்சை பலனின்றி 3 மாதங்களின் பின்னர் உயிரிழந்தார்.

புத்தளம் - வென்னப்புவவில் நடைபெற்ற இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

உயிரிழந்த மாணவி தரம் 10இல் கல்வி கற்று வந்துள்ளார். இந்த நிலையில், இரு ஆசிரியைகள் குறித்த மாணவியை தாக்கியுள்ளனர்.

வகுப்பறையை விட்டு வேறொரு மாணவியுடன் வெளியேறியமை தொடர்பில் அவர் இவ்வாறு தண்டிக்கப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான விசாரணைகளின் பின்னர், சந்தேக நபர்களான ஆசிரியைகள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு கடந்த செப்ரெம்பர் 13 ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்தநிலையில், ராகம மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த குறித்த மாணவி சிகிச்சை பலனின்றி அண்மையில் உயிரிழந்தார்.

இதையடுத்து, பிணையில் விடுவிக்கப்பட்ட ஆசிரியைகள் இருவரும் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

# டிபெண்டர் ரக ஜீப் கண்டியில் மீட்பு!

கண்டி, நவ. 18

கண்டியில் கடந்த காலங்களில் பல சொகுசு வாகனங்கள் கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் நவீன சொகுசு டிபெண்டர் ஜீப் வண்டி ஒன்று கண்டி தலைமையக பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த வாகனம் கண்டியில் உள்ள முன்னணி மீன் விற்பனை வர்த்தகர் ஒருவருக்கு சொந்தமானது என்று கூறப்படுகிறது.

பதில் பொலிஸ் மா அதிபருக்கு கிடைத்த நேரடி முறைப்பாடுக்கமைய இந்த வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளது. (ஐ)

# உயர்தர பரீட்சை செயலமர்வுகளுக்கு செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் தடை!

கொழும்பு, நவ. 18

உயர்தர பொதுச் சான்றிதழ் பரீட்சை தொடர்பான விரிவுரைகள், பயிற்சி வகுப்புகள், செயலமர்வுகள் மற்றும் கருத்தரங்குகள் செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் நிறைவடையும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
பரீட்சைத் திணைக்களம் - இலங்கை
Department of Examinations - Sri Lanka

அறிவுறுத்தல்களை பின்பற்றாதவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த காலங்களில் ஏற்பட்ட பிரச்னைகளின் அடிப்படையில் பரீட்சை காலத்தில் பரீட்சை கண்காணிப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த ஆண்டுக்கான க. பொ. த. உயர்தர பரீட்சை டிசம்பர் 25 முதல் 20ஆம் தேதி வரை 2,312 தேர்வு மையங்களிலும், 319 ஒருங்கிணைப்பு மையங்களிலும் நடைபெறவுள்ளது.

இந்த வருடம் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 3இலட்சத்து 33 ஆயிரத்து 385 மாணவர்கள் தோற்றவுள்ளனர். இதில், 2 இலட்சத்து 53 ஆயிரத்து 390 மாணவர்கள் பாடசாலை மூலமும் 79 ஆயிரத்து 795 மாணவர்கள் தனிப்பட்டவும் தோற்றவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் புறக்கணிக்கப்படுகின்றனரென இனி ஜெனிவாவில் கேள்விகேட்க முடியாது

## சட்டத்தரணி பிரதீபா மஹாநம சொல்கிறார்

கொழும்பு, நவ. 18

**வடக்கு, கிழக்கு மக்கள் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கத்துக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள். அரசியல் கட்டமைப்பில் இருந்து தமிழர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்று ஜெனிவாவில் இனி கேள்வியெழுப்ப முடியாது - என சட்டத்தரணி பிரதீபா மஹாநாம தெரிவித்தார்.**

அத்துடன், பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்க வேண்டும் - என்றும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில்,

பொதுத்தேர்தலில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி 21 தேர்தல் மாவட்டங்களிலும் அமோக வெற்றி பெற்றுள்ளமை விசேட அம்சமாகும்.

வடக்கு, கிழக்கு மாகாண தமிழ் மக்கள் பாரம்பரியமான அரசியல் கலாசாரத்தில் இருந்து விலகி புதிய அரசியல் கலாசாரத்துக்குள் பிரவேசித்துள்ளார்கள். எவ்விதமான அரசியல் கூட்டணியுமில்லாமல் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்றுள்ளமை விசேட அம்சமாகும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் பொது அரசியல் கட்டமைப்பில் இருந்து புறக்கணிக்கப்பட்டுள்ளதாகவே கடந்த காலங்களில் சர்வதேச மட்டத்திலும், சர்வதேச மனித உரிமைகள் ஆணைக் குழுவிலும் தொடர்ச்சியாக குறிப்பிட்டது.

இந்த விடயங்களை முன்னிலைப்படுத்தி இலங்கைக்கு எதிரான பிரேரணைகளும் முன்வைக்கப்பட்டன. ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கத்துக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்கள் குறிப்பாக தமிழ் மக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்கியுள்ளார்கள்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கூட்டத்தொடர் 2025 பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ளது.

தமிழ் மக்கள் புதிய அரசியல் கட்டமைப்புக்குள் பிரவேசித்துள்ளார்கள், பழைய பாரம்பரியமான அரசியல் கட்டமைப்பை புறக்கணித்துள்ளார்கள் என்ற செய்தியை அரசாங்கம் சர்வதேச அரங்கில் எடுத்துரைக்க வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாண மக்கள் எவ்விதமான எதிர்பார்ப்பு மற்றும் நிபந்தனைகளின்றி ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு ஆதரவளித்துள்ளார்கள்.

ஆகவே, தமிழர்களின் அடிப்படை பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு ஜனாதிபதி நாட்டின் சட்ட கட்டமைப்புக்குள் இருந்து தீர்மானங்களை எடுக்க வேண்டும். பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் பல ஆண்டுகாலமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளுக்கு ஜனாதிபதி பொது மன்னிப்பு வழங்க வேண்டும் - என்றார். (ஐ)

# தேசியப் பட்டியல் மூலம் யார் எம். பியாக முடியும்

## தேர்தல் திணைக்களம் அறிவிப்பு




கொழும்பு, நவ. 18

தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளுக்கு ஏற்கனவே கட்சிகளால் பரிந்துரைக்கப்பட்டவர்கள் அல்லது சமீபத்திய பொதுத் தேர்தலில் தேர்தலில் வேட்பாளர் பட்டியலில் தெரிவு செய்யப்படாதவர்கள் மட்டுமே தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர்களாக பாராளுமன்றத்துக்கு பெயரிட முடியும் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறீரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இராஜகிரியவில் உள்ள தேர்தல்கள் திணைக்களத்தில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் கட்சிகள் பெற்ற வாக்குகளுக்கு அமைவாக தேசியபட்டியல் ஆசனங்களின் ஒதுக்கீடுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. அரசியல் கட்சிகள் தங்களின் தேசியப் பட்டியலை சமர்ப்பித்துள்ளன.

அவ்வாறான நிலையில், அக்கட்சிகள் தமது தேசியப்பட்டியல் ஊடாக தெரிவாகும் உறுப்பினர்களை இறுதி செய்து எமக்கு அறிவிக்க வேண்டும். அவர்கள் தேசியப் பட்டியலில் உள்ளவர்களையோ அல்லது தேர்தலில் போட்டியிட்டு தெரிவுசெய்யப்படாத வேட்பாளர்களையோ உறுப்பினர்களாக அறிவிக்க முடியும்.

அதனைத் தாண்டி வேறு எவரையும் அவர்களால் பெயரிட முடியாது. தேசியப்பட்டியலுக்காக பெயரிடப்படுபவர்கள் பட்டியல் கட்சியின் செயலாளரால் எமக்கு குறித்துரைக்கப்படும் - என்றார். (ஐ)

# ஐக்கிய மக்கள் சக்தி எம்முடன் மீண்டும் இணைய வேண்டும்!

## ஐக்கிய தேசிய கட்சி கோரிக்கை

கொழும்பு, நவ. 18

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியை மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணையுமாறு பகிரங்க அழைப்பை விடுப்பதாக அந்தக் கட்சியின் உறுப்பினரான ஆஷி மாரசிங்க கேரியுள்ளார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் ஊடகங்களை சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பொதுத் தேர்தலின் பின்னரான சூழல்கள் உணரப்பட்டுள்ள நிலையில் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியிடத்தில் பகிரங்கமான கோரிக்கையை முன்வைக்கின்றேன்.

ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் மீண்டும் இணைந்து செயல்பட வேண்டும். யானையை மீண்டும் பலப்



படுத்த வேண்டும். இந்த விடயத்தை கோரியமைக்காக என்னைக் கட்சியில் இருந்து நீக்குவார்களோ தெரியாது.

ஆனால், ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய தேசியக் கட்சியும் இணைந்து செயல்படுவது மிகவும் அவசியமானதொரு விடயமாகும். ஐக்கிய மக்கள் சக்தியை இணைப்பதுதான் தற்போதுள்ள சவாலான விடயமாகும். அந்த சவாலை முகங்கொடுப்பதற்கு நாம் தயாராகவே உள்ளோம் - என்றார். (ஐ)

# புதிய பாராளுமன்ற உறுப்பினர்களை பதிவு செய்யும் நடவடிக்கை ஆரம்பம்

கொழும்பு, நவ. 18

பத்தாவது பாராளுமன்றத்திற்கு தெரிவான புதிய பாராளுமன்ற உறுப்பினர்களை பதிவு செய்யும் நடவடிக்கைகள் நேற்று ஆரம்பமாகின.

இந்தப் பதிவு முறைமை இணையவழி மூலமாக நேற்று ஆரம்பமானது. அத்துடன், தெரிவான பாராளுமன்ற உறுப்பினர்கள் தமக்கு தேவையான தகவல்களை அறிந்து கொள்வதற்காக எதிர்வரும் 19, 20 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தில் இரண்டு தகவல் சாளரங்களை திறப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, புதிதாக தெரிவான பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பாராளுமன்ற முறைமை மற்றும் பாராளுமன்ற விவகாரங்கள் தொடர்பில் 3 நாள் செயலமர்வு நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த செயலமர்வு 25, 26 மற்றும் 27 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

# அமெரிக்கக் கடற்படை கப்பல் கொழும்பில் தரித்து நிற்கிறது

கொழும்பு, நவ. 18

அமெரிக்க கடற்படைக்கு சொந்தமான யு. எஸ். எஸ் மைக்கல் மர்பி என்ற போர்க் கப்பல் வழங்கல் மற்றும் சேவை தேவைகளை பூர்த்தி செய்வதற்காக நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

கடற்படை மரபுகளுக்கு அமைய கப்பலை பெற்றுக் கொள்ள இலங்கை கடற்படையினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன்படி, 155.2 மீற்றர் நீளமும், மொத்தம் 333 கப்பல் களை கொண்ட "யு.எஸ்.எஸ் மைக்கல் மர்பி" என்ற ஏவுகணை அழிப்பான் போர்க்கப்பல் கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ரெஹான் ஜயவிக்கிரமவும் அரசியலிலிருந்து விலகினார்!

கொழும்பு, நவ. 18

தாம் தீவிர அரசியலில் இருந்தும் ஐக்கிய மக்கள் சக்தியின் வெலிகம அமைப்பாளர் பதவியில் இருந்து விலகுகிறார் என்றும் ரெஹான் ஜயவிக்ரம தெரிவித்துள்ளார்.

தமது எக்ஸ் செய்தியில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இது நம்பமுடியாத சவாலான பயணமாகும். குறிப்பாக மீண்டும் மீண்டும் தேர்தல் தோல்விகளை வழிநடத்துகிறது என்று அவர் கூறியுள்ளார்.

வெலிகம அமைப்பாளர் பதவியில் இருந்து விலகும் கடிதத்தை, கட்சியின் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் கையளிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீண்ட ஆலோசனைக்கு பின்னர், தீவிர அரசியலில் இருந்து விலக முடிவு செய்துள்ளதாக குறிப்பிட்ட ரெஹான், இது ஒரு நம்பமுடியாத சவாலான பயணம் என்றும் கூறியுள்ளார்.

தேர்தல் தோல்விகள், மற்றும் மிக முக்கியமானவற்றில் கவனம் செலுத்த வேண்டிய நேரம் இது என்று, தாம் உணர்வதாகவும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# 66 கடவுச்சீட்டுகளுடன் இருவர் கைதாகினர்!

கொழும்பு, நவ. 18

66 கடவுச்சீட்டுக்களை வைத்திருந்த பெண் உட்பட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு - கஹதுடுவ பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில் நடத்தப்பட்ட சுற்றிவளைப்பிலயே இருவரும் கைதாகினர்.

42 வயது பெண்ணும் 38 வயது ஆணுமே கைதாகினர். கைதான பெண் சிங்கப்பூர், ஹொங்கொங், டுபாய் மற்றும் ருமேனியா ஆகிய நாடுகளில் பணியாற்றிய பின்னர், கடந்த 2022 ஆம் ஆண்டு நாட்டுக்குள் வந்து சந்தேகநபருடன் தங்கியிருந்துள்ளார்.

இவர்கள் இருவரும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக்கூறி, 2 - 3 இலட்சம் ரூபாயை பலரிடம் பெற்றுள்ளனர்.

சந்தேகநபர்கள் தங்கியிருந்த வீட்டை சோதனையிட்டபோது, 20 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருளும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “ஊழல், வன்முறைகள் இல்லாத ஒரு நிலை உருவாக வேண்டும்”

மட்டக்களப்பு, நவ. 18

**இலங்கையில் ஊழல் அற்ற, வன்முறைகள் அற்ற ஒரு நிலை உருவாக வேண்டும் என்பதை மட்டக்களப்பு மாவட்ட மக்களின் வாக்களிப்புகள் மிகத் தெளி வாக தெரியப்படுத்தியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினராக தெரிவான மருத்துவர் இ. சிறிநாத் தெரிவித்தார்.**



மட்டக்களப்பு, செங்கலடியில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்த் தேசியத்தை நேசித்து இலங்கை தமிழ் அரசுக் கட்சிக்கும் எனக்கும் வாக்களித்த அனைத்து தமிழ் மக்களுக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இலங்கை முழுவதுமே மாற்றம் என்ற அரசியல் புயல் வீசிக் கொண்டிருக்கின்றபோது அந்த மாற்றத்தை தமிழ்த் தேசியத்தின் ஊடாக வழங்க முடியும் என்ற நம்பிக்கையை மட்டக்களப்பு மக்கள் எம்மீது கொண்டிருக்கின்றார்கள்.

அந்த வகையில் முழு இலங்கைக்கும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் மக்கள் ஊழல் அற்ற, வன்முறையற்ற நிலைமை வேண்டும் என்பதை தெளிவாக தெரியப்படுத்தியுள்ளனர்.
- என்றார்.

# சின்னமுத்து தடுப்பூசி ஏற்றல்



காரைதீவு, நவ. 18

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட மாளிகைக்காடு, மாவடிப்பள்ளி பிரதேசங்களிலுள்ளவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் செயல்பாடு காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் மருத்துவர் தஸ்லிமா பஷீர் தலைமையில் நடைபெற்றது.

இலங்கையில் சின்னமுத்து நோய் பரவுவதால் 20 - 30 வயதுக்குட்பட்ட இளம் வயதைச் சேர்ந்தவர்களுக்கு இரண்டாவது நாளாக நேற்றும் சின்ன முத்து தடுப்பூசி வழங்கப்பட் டது.(எ)

# வாக்களித்த மக்களுக்கு நேரில் நன்றி தெரிவித்தார் குகதாசன்



திருகோணமலை, நவ. 18

திருகோணமலை மாவட்டத்தில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி சார்பில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சண்முகம் குகதாசனுக்கு சல்லி பகுதி மக்கள் வரவேற்பளித்தனர்.

இதன்போது, வாக்களித்த மக்களுக்கு குகதாசன் நன்றிகளை தெரிவித்துக் கொண்டார். (எ)

# காணி உரிமைகள் தொடர்பில் திருகோணமலையில் செயலமர்வு

திருகோணமலை, நவ. 18

நில மீட்புக்கான செயல்திட்டத்தின்கீழ் கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு

காணி உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வு திருகோணமலை சர்வோ தயம் கேட்போர் கூடத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது, கிழக்கு மாகாணத்தில் தமிழ் பேசும் மக்கள் எதிர்கொண்டு வரும் காணிப் பிணக்குகள் தொடர்பான தெளிவுபடுத்தல்கள் மற்றும்

காணிப் பிணக்குக்கு தீர்வை பெறக் கூடிய வழிமுறைகள், காணி உரிமை தொடர்பான விளக்கங்கள் வழங்கப்பட்டன.

இந்தச் செயலமர்வில் திருகோணமலை மாவட்டத் தில் அதிக காணிப் பிணக்குகள் உள்ள மூதூர், குச்சவெளி பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த



-30இளைஞர்கள், சிவில் அமைப்பினர் கலந்து கொண்டனர்.

இந்தச் செயலமர்வில் அகம் மனிதாபிமான வள நிலையத்தின் பிரதி இணைப்பாளர் அ. மதன் ,சட்டத்தரணிகள், அகம் மனிதாபிமான வள நிலையத்தின் உதவிக் கணக்காளர் கு. சஞ்சலிதா, கள இணைப்பாளர் சி. லீனா ஆகியோர் வளவாளர்களாக பங்குபற்றினர். (எ)

# கிழக்கிலிருந்து 7 பேர் உட்பட 28 தமிழர்கள் பாராளுமன்றுக்கு

மட்டக்களப்பு, நவ. 18

கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நான்கு தமிழ்ர்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அத்தோடு,பத்தாவது பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்று முடிந்த நிலையில் வடக்கு - கிழக்கில் இருந்து 25 தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்தோடு, மூவர் தேசிய பட்டியல் மூலம் தெரிவாகியுள்ளனர்.இது பாராளுமன்றில் 12 வீத பிரதிநிதித்துவத்தை காட்டுகிறது.

10 மாவட்டங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி இவர்கள் பாராளுமன்றம் செல்கிறார்கள்.

வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி 2 தேசியப் பட்டியலுடன் 19 பேர் பாராளுமன்றம் செல்கிறார்கள்.

தமிழ்ப் பிரதிநிதிகளில் அதிகவாக்கு பெற்றவர் திருமதி சரோஜா போல்ராஜ். இவர் மாத்தறை மாவட்டத்தில் ஓர் இலட்சத்து 48 ஆயிரத்து 379 வாக்குகளை பெற்று பெருவெற்றி பெற்றுள்ளார்.

இதேவேளை யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டததில் சிவஞானம் சிறீதரன்,கஜேந்திரகுமார் பொன்னம் பலம்,கருணநாதன் இளங்குமரன்,சண்முகநாதன் பவானந்த ராஜா,ஜெயச்சந்திரமூர்த்தி ரஜீ வன்,இராமநாதன் அர்ச்சுனா ஆகியோரும் வன்னி தேர்தல்

மாவட்டத்தில்துரைராசா ரவிகரன்,செல்வம் அடைக்கலநாதன்,செல்வத்தம்பி திலகநாதன்,ஆறுமுகம் ஜெக தீஸ்வரன் ஆகியோரும்.

திருகோணமலை மாவட்டத்தில்சண்முகம் குகதாசன், அருண் ஹேமச்சந்திராவும்

மட்டக்களப்பு மாவட்டத்தில்இராசமாணிக்கம் சாணக்கியன்,ஞானமுத்து சிறீநேசன், இளையதம்பி சிறிநாத்,கந்தசாமி பிரபுவும் அம்பாறை மாவட்டத்தில் கவீந்திரன் கோடீஸ்வரன்,

நுவரெலியா மாவட்டத்தில் பழனி திகாம்பரம்,வேலுச்சாமி இராதாகிருஷ்ணன்,கிருஷ்ணன் கலைச்செல்வி,ஜீவன் தொண்டமான்,பதுளை மாவட்டத்தில் கிட்டினன் செல்வராஜ்,அம்பிகா சாமுவேல் ஆகியோரும் இரத்தினபுரி மாவட்டத்தில்எஸ். பிரதீப்,

மாத்தறை மாவட்டத்தில் சரோஜா போல்ராஜூம்

யாழ்ப்பாணத்திலிருந்து தேசிய பட்டியல் மூலம் இராமலிங்கம் சந்திரசேகரனும், வவுனியாவிலிருந்து ப. சத்தியலிங்கமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (எ)






...ல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் சித்தி பெற்று பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவிகள், சாதாரண தரப் பரீட்சையில் 9ஏ, 8 ஏபி, 8ஏசி சித்திபெற்ற மாணவிகள், இணைப்பா[illegible] சர்வதேச ரீதியாக திறமைகளை வெளிப்படுத்திய மாணவிகளை பாராட்டி கௌரவிக்கும் விழா கல்லூரியின் அதிபர் ஏ. பி. நஸ்மியா [illegible] மெரிடியன் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யா - உக்ரைன் போர் விரைவில் முடிவுக்கு வரும்

## ட்ரம்ப்மீது ஜெலென்ஸ்கி நம்பிக்கை



கீவ், நவ. 18

**டொனால்ட் ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கு வருவதால் உக்ரைன்மீது ரஷ்யா தொடுத்த போர் விரைவில் முடிவுக்கு வரும் என்று அந்த நாட்டு ஜனாதிபதி விளாடிமிர் ஜெலென்ஸ்கி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**

உக்ரைன் நாட்டு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில், "டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்றவுடன், உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் போர் விரைவில் முடிவுக்கு வரும். இப்போது வெள்ளை மாளிகையை வழிநடத்தும் புதிய அணியின் கொள்கைகளே இதற்குக் காரணமாக இருக்கும். நிச்சயம் இது நடக்கும். ஏனெனில், இது அவர்களின் அணுகுமுறை, அவர்களின் குடிமக்களுக்கு அவர்கள் அளித்த வாக்குறுதி"என தெரிவித்தார்.

அப்படியானால் போர் எப்போது முடிவுக்கு வரும்? என்ற கேள்விக்கு பதிலளித்த ஜெலென்ஸ்கி, "எப்பேது போர் முடிவுக்கு வரும் என்பது குறித்த சரியான திகதி எங்களுக்குத் தெரியாது"என்று குறிப்பிட்டார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ட்ரம்ப் வெற்றி பெற்ற பிறகு ஜெலென்ஸ்கியுடன் தொலைபேசியில் உரையாடியதை சுட்டிக்காட்டி, அந்த உரையாடல் எவ்வாறு இருந்தது என செய்தியாளர் கேள்வி எழுப்பினார். இதற்கு பதிலளித்த ஜெலென்ஸ்கி, "ட்ரம்பின் தொலைபேசி உரையாடல் ஆக்கபூர்வமானதாக இருந்தது. எங்கள் நிலைப்பாட்டுக்கு எதிரான எதையும் நான் கேட்கவில்லை"என்று கூறினார். (எ)

# ஐ. நாவுக்கான ஈரான் தூதுவருடன் எலான் மஸ்க் இரகசிய சந்திப்பு

நியூயோர்க், நவ. 18

மத்திய கிழக்கில் பதற்றம் நிலவி வரும் சூழலில், நியூயோர்க்கில் ஐ. நாவுக்கான ஈரான் தூதுவரை, ட்ரம்ப் அரசின் செயல்திறன் நிறுவனத்தின் இணை இயக்குநரான எலான் மஸ்க் இரகசியமாக சந்தித்துள்ளதாகவும், அமெரிக்கா - ஈரான் இடையிலான பதற்றத்தை தணிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து விவாதித்தாகவும் தகவல் வெளியாகியுள்ளது. இந்தச் சந்திப்பின்போது, ஐ. நாவுக்கான ஈரான் தூதுவர் அமீர் சயீத் இரவானி, எலான் மஸ்கிடம், ஈரான் மீது விதிக்கப்பட்ட தடைகளுக்கு விதிவிலக்கு அளிக்க வேண்டும். அமெரிக்காவில் உள்ள வணிக நிறுவனங்கள் ஈரானில் வந்து வணிகத்தில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொண்டதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்தச் சந்திப்பு குறித்து பகிரங்கமாக கருத்து தெரிவிக்க மாட்டோம் என்று ஐக்கிய நாடுகள் சபைக்கான ஈரானின் தூதுக்குழு தெரிவித்துள்ளது. (எ)

# இளைஞன் வெறிச்செயல் 8 பேர் பலி; 43 பேர் காயம்

## சீனாவில் தொடரும் வன்முறை

பிஜிங், நவ. 18

சீனாவின் வூக்ஸி நகரில் 21 வயது இளைஞன் நடத்திய கத்திக்குத்து தாக்குதலில் 8 பேர் உயிரிழந்தனர். 43 பேர் காயமடைந்தனர்.

சீனாவின் ஜியாங்சு மாகாணத்தின் வூக்ஸி நகரில் கல்வி நிறுவனம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த நிலையில், அந்தக் கல்வி நிறுவனத்தில் கற்கும் 21 வயது இளைஞன் கண்ணில் பட்டவர்கள் மீது சரமாரியாக கத்திக்குத்து தாக்குதல் நடத்தினார்.

இந்தத் தாக்குதலில் 8 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். மேலும், 17 பேர் படுகாயமடைந்தனர்.

சீனாவின் ஷூஹாய் நகரில் விவாகரத்து பெற்ற, கடன் நெருக்கடியால் பாதிக்கப்பட்ட நபர் காரை மோதச் செய்து நடத்திய தாக்குதலில் 35 பேர் உயிரிழந்த அதிர்ச்சி சம்பவம் குறித்த பரபரப்பு அடங்குவதற்குள் இந்தக் கத்திக்குத்து சம்பவம் அரங்கேறியுள்ளது. (எ)

# எக்ஸ் ஒரு நச்சு ஊடக தளம் கார்டியன் கடும் விமர்சனம்



வாஷிங்டன், நவ. 18

"எக்ஸ்" என்பது ஒரு நச்சு ஊடக தளம் என தி கார்டியன் ஆங்கில செய்தி நிறுவனம் கடுமையாக விமர்சித்துள்ளது.

உலகளவில் பிரபலமாக இருந்த ட்விட்டர் நிறுவனத்தை கைப்பற்றி எக்ஸ் எனப் பெயர் மாற்றியது முதல் ஏட்டிக்குப் போட்டியாகப் பல விடயங்களைச் செய்து வருகிறார் தொழிலதிபர் எலான் மஸ்க். 2022இல் எக்ஸ் தளத்தின் தலைமை நிர்வாகியாக பதவியேற்ற வேகத்தில் புதிய விதிமுறைகளை நடைமுறைப்படுத்தியது, ஊழியர்களை பணிநீக்கம் செய்தது, பயனர்களிடம் பணம் வசூலிக்க ஆரம்பித்தது என தனது இஷ்டப்படி மாற்றங்களைச் செய்து வருகிறார் எலான் மஸ்க்.

இதனால் பலரது விமர்சனங்களுக்கும் ஆளானாலும் அவர் தனது நடவடிக்கைகளை நிறுத்துவதாக இல்லை. இதனால் உலகளவில் அதிருப்தியடைந்த பயனர்கள், கூட்டமாக எக்ஸ் தளத்தைவிட்டு வெளியேறினர். இதன் தொடர்ச்சியாக 200 ஆண்டுகள் பாரம்பரிய மிக்க இங்கிலாந்தைச் சேர்ந்த 'தி கார்டியன்' ஆங்கில செய்தி நிறுவனம் எக்ஸ் தளத்திலிருந்து வெளியேறுவதாக அறிவித்துள்ளது. எக்ஸ் என்பது ஒரு நச்சு ஊடக தளம் என தி கார்டியன் முன்வைத்திருக்கும் விமர்சனத்தை வரவேற்றும், கண்டித்தும் கருத்துகளை பதிவிடும் பயனர்களுக்கு மத்தியில் மோதல் வலுத்துள்ளது. (எ)

# அரச வேலைகள் குறைக்கப்படும்

## ட்ரம்ப் அரசாங்க நிர்வாகி விவேக் இராமசாமி தகவல்



வாஷிங்டன்,நவ. 18

அமெரிக்காவில் அரசாங்க வேலை வாய்ப்புகள் பெருமளவில் குறைக்கப்படும் என்று ட்ரம்ப் நிர்வாகத்தின் புதிய நிர்வாகி விவேக் இராமசாமி தெரிவித்தார்.

அமெரிக்காவில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில், குடியரசு கட்சியைச் சேர்ந்த டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற்றார். அவரது பிரசார குழுவில் இடம்பெற்ற உறுப்பினர்கள் எல்லாம் முக்கிய பதவிகளில் பணியமர்த்தப்படவுள்ளனர். அமெரிக்க அரசு நிர்வாகத்தை மேம்படுத்த அரசு திறன் துறை உருவாக்கப்படும் என்று ட்ரம்ப் அறிவித்துள்ளார். இத்து றைக்கு பிரபல தொழிலதிபர்கள் எலான் மஸ்க், இந்திய அமெரிக் கர் விவேக் இராமசாமி ஆகி யோர் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் அமெரிக்க அரசு நிர்வாகத்தில் கொண்டுவரவுள்ள மாற்றங்கள் குறித்து விவேக் இராமசாமி கூறுகையில், "வாஷிங்டன் அரசு நிர்வாகத்தில் உள்ள பல இலட்சம் பேரை அகற்றும் பணியை எலான் மஸ்க் மற்றும் நானும் தொடங்கவுள்ளோம். இதன் மூலம் நாங்கள் நாட்டை காப்பாற்றுவோம். அரசு நிர்வாகத்தில் அதிகாரிகள் அதிகளவில் இருந்தால், புதுமைகள் எதுவும் ஏற்படாது. செலவு தான் அதிகரிக்கும். அமெரிக்காவின் பல துறைகளில் நிலவும் உண்மையான பிரச்னை இது தான்.

கடந்த 4 ஆண்டுகளாக நாடு வீழ்ச்சியை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. இதிலிருந்து நாட்டைக் காப்பாற்ற நாம் போராட வேண்டும். அமெரிக்க அரசியலில் நடந்த மாற்றம் மூலம், அமெரிக்காவில் மீண்டும் எழுச்சி தொடங்கவுள்ளது. அமெரிக்க மக்களுக்கு சிறந்த எதிர்காலமும், புதிய விடியலும் ஏற்படவுள்ளது. நமது குழந்தைகள் வளர்ச்சி அடைவர். கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு மூலம் சிறந்த நபர்களுக்கு வேறுபாடின்றி வேலை கிடைக்கும்"-என்றார். (எ)

# ஆப்கானில் ஆற்றுக்குள் கார் கவிழ்ந்து விபத்து!

## 4 குழந்தைகள் உட்பட 8 பேர் பலி

காபுல், நவ. 18

ஆற்றுக்குள் கார் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் 8 பேர் உயிரிழந்தனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டின் படக்ஷன் மாகாணம் பைசாபாத் நகர் நோக்கி நேற்று அதிகாலை கார் ஒன்று சென்றுகொண்டிருந்தது. அந்தக் காரில் 4 குழந்தைகள், 3 பெண்கள் உட்பட 8 பேர் பயணித்தனர்.

கோக்சா ஆறு அருகே மலைப்பாங்கான பகுதியில் பயணித்த போது சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த கார் ஆற்றுக்குள் கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்தக் கோர விபத்தில் காரில் பயணித்த 8 பேரும் உயிரிழந்தனர். (எ)

தீபாவளி விருந்தில் அசைவம், மதுபானம்

# இந்துக்களிடம் மன்னிப்பு கோரிய இங்கிலாந்து பிரதமர் அலுவலகம்

லண்டன், நவ. 18

தீபாவளி விருந்தில் அசைவம் மற்றும் மதுபான வகைகள் பரிமாறப்பட்டமை குறித்து இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அதிருப்தி தெரிவித்ததையடுத்து இங்கிலாந்து பிரதமர் அலுவலகம் மன்னிப்புக் கோரியுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் தீபாவளியையொட்டி இங்கிலாந்து பிரதமர் அலுவலகம் சார்பில் சிறப்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்படுவது வழக்கம். அந்த வகையில் லண்டனில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் தீபாவளி சிறப்பு நிகழ்வு நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து நடைபெற்ற விருந்தில் அசைவம் மற்றும் மதுபானவகைகள் பரிமாறப்பட்டன.

இதனையடுத்து பிரிட்டிஷ் கன்சர்வேடிவ் கட்சி எம்.பியும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவருமான ஷிவானி ராஜா, தனது எக்ஸ் பக்கத்தில் இந்த விவகாரம் குறித்து அதிருப்தி தெரிவித்திருந்தார். அதில், "இந்த ஆண்டு நிகழ்வின் ஏற்பாடு மிக மோசமாக இருந்ததாக நான் உணர்கிறேன். எனது சொந்தத் தொகுதியான லெய்செஸ்டர் கிழக்கில் ஆயிரக்கணக்கான இந்து மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு இந்துவாக, இந்த கவனக்குறைவின் விளைவாக, அரசின் எதிர்மறையான தன்மையால் இந்த ஆண்டு விழா மறைக்கப்பட்டதை அறிந்து மிகவும் வேதனையடைந்தேன்"என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த நிலையில், தீபாவளி விருந்தில் அசைவம் மற்றும் மதுபானங்கள் பரிமாறப்பட்டது குறித்து இங்கிலாந்து பிரதமர் அலுவலகம் மன்னிப்புக் கோரியுள்ளது. "இந்த பிரச்னையில் உணர்வின் வலிமையை நாங்கள் புரிந்து கொள்கிறோம். எனவே இந்து சமூகத்திடம் மன்னிப்பு கேட்கிறோம். இது மீண்டும் நடக்காது என்றும் உறுதியளிக்கிறோம் என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணி வெற்றி


## ரி - 20 தொடரை இழந்தது பாகிஸ்தான் அணி

சிட்னி, நவ. 18

பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது ரி - 20 போட்டியில் அவுஸ்திரேலியா 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

சிட்னியில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 147 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணி சார்பில் அதிகபட்சமாக மேத்யூ ஷார்ட் 32, ஆரோன் ஹார்டி 28, கிளென் மேக்ஸ்வெல் 21, ஜேக் ப்ரேசர் - மெக்கர்க் 20 ஓட்டங்கள் சேர்த்தனர். ஒரு கட்டத்தில் அவுஸ்திரேலிய அணி 3.1 ஓவர்களில் விக்கெட் இழப்பின்றி 50 ஓட்டங்களைக் குவித்திருந்தது. ஆனால், அதன் பின்னர் சீரான இடைவெளியில் விக்கெட்களை இழந்ததால் ஓட்டக் குவிப்பில் தேக்கம் ஏற்பட்டது. பாகிஸ்தான் அணி தரப்பில் ஹரிஸ் ரவூப் 4, அப்பாஸ் அப்ரிடி 3, சுபியான் முகீம் 2 விக்கெட்கள் வீழ்த்தினர்.

148 ஓட்டங்கள் என்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 19. 4 ஓவர்களில் 134 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்களையும் இழந்தது. அதிகபட்சமாக உஸ்மான் கான் 52, இர்பான் கான் 37 ஓட்டங்கள் சேர்த்தனர். முகமது ரிஸ்வான் 16, பாபர் அஸாம் 3, சாஹிப்சாதா பர்ஹான் 5, சல்மான் ஆகா 0 ஆட்டமிழந்து வெளியேறினர். அவுஸ்திரேலிய அணி சார்பில் ஸ்பென்சர் ஜோன்சன் 5, அடம் ஸம்பா 2 விக்கெட்களை வீழ்த்தினர். இந்த நிலையில் 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி 3



போட்டிகள் கொண்ட ரி - 20 கிரிக்கெட் தொடரை 2 - 0 என கைப்பற்றியது. முதல் ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணி 29 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. கடைசி மற்றும் 3ஆவது போட்டி இன்று நடைபெறுகிறது.

(எ)

# மைக் டைசன் தோல்வி

ஆர்லிங்டன், நவ. 18

குத்துச்சண்டை ஜாம்பவான் மைக் டைசன் இளம் வீரர் ஜேக் பாலிடம் தோல்வியடைந்தார். இதில் நடுவர்கள் தங்கள் முடிவுகளில் மாறுபட்டனர். நடுவர்களில் ஒருவர் ஜேக் பாலுக்கு 80 - 72 என்றும், மற்ற இருவர் 79 - 73 என்றும் புள்ளிகள் கொடுத்தனர்.

58 வயதான குத்துச்சண்டை வீரர் மைக் டைசன் மற்றும் 27 வயது சமூக வலைத்தள பிரபலமாக இருந்து தொழில்முறை குத்துச்சண்டை வீரரான ஜேக் பால் இடையிலான இந்தப் போட்டி தலைமுறைகள் கடந்த இரண்டு வீரர்களுக்கு இடையிலான போட்டியாக பார்க்கப்பட்டது. பல ஆண்டுகளுக்கு பிறகு மைக் டைசன் குத்துச் சண்டை களத்துக்கு வந்தார். இது இரசிகர்களிடையே மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது.

அமெரிக்காவின் டெக்சாஸில் உள்ள ஆர்லிங்டன் 'ஏடி அண்ட் டி' விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. போட்டி தொடங்கியதும் டைசன் தனது பாணியில் வேக வேகமாக தாக்குதல் கொடுத்தார். ஆனால், அது எந்தவித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. அதன் பிறகு பால் மிகவும் ஆக்ரோஷமாக விளையாடினார்.

இந்த போட்டிக்கான நடுவர்களில் ஒருவர் ஜேக் பாலுக்கு 80 - 72 என்றும், மற்ற இருவர் 79 - 73 என்றும் புள்ளிகள் கொடுத்தனர். இறுதி மணி அடித்த போது மரியாதை நிமித்தமாக டைசன் முன்பாக ஜேக் பால் தலை வணங்கினார். (எ)





# இந்திய மகளிர் ஹொக்கி அணி அரையிறுதிக்கு முன்னேற்றம்

ராஜ்கிர், நவ. 18

சீனாவுடன் நடைபெற்ற போட்டியில் வெற்றி பெற்ற இந்திய மகளிர் ஹொக்கி அணி அரையிறுதிக்கு முன்னேறியது.

மகளிருக்கான ஆசிய சம்பியன்ஸ் கிண்ண ஹொக்கி தொடர் இந்தியாவின் பீஹார் மாநிலம் ராஜ்கிர் பகுதியில் நடைபெற்று வருகிறது. இதில் இந்திய அணி தனது 4ஆவது லீக் ஆட்டத்தில், ஒலிம்பிக்கில் வெள்ளிப் பதக்கம் சென்ற சீனாவை எதிர்கொண்டது. இதில் இந்திய அணி 3 - 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இந்திய அணி தரப்பில் சங்கீதா குமாரி 32ஆவது நிமிடத்திலும், சலீமா 37ஆவது நிமிடத்திலும் கோல் அடித்தனர். 60ஆவது நிமிடத்தில் தீபிகா கோல் அடித்தார். இந்திய அணிக்கு இது 4ஆவது வெற்றியாக அமைந்தது. இதன் மூலம் இந்திய அணி 8 புள்ளிகளுடன் அரையிறுதிக்கு முன்னேறியது. (எ)

# சஞ்சு சாம்சன், திலக் வர்மா சதம் இந்திய அணி அசத்தல் வெற்றி

## சொந்த மண்ணில் தென் ஆபிரிக்கா சொதப்பல்




ஜொகன்னஸ்பேர்க், நவ. 18

இந்தியா - தென் ஆபிரிக்கா அணிகள் இடையிலான கடைசி மற்றும் 4ஆவது ரி - 20 கிரிக்கெட் போட்டியில் வெற்றி பெற்ற இந்தியா 3 - 1 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது.

இரு அணிகள் இடையிலான 4 ஆட்டங்கள் கொண்ட ரி - 20 தொடரில் டர்பனில் நடைபெற்ற முதல் ஆட்டத்தில் இந்திய அணி 61 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. கெபர்காவில் நடைபெற்ற 2ஆவது ஆட்டத்தில் பதிலடி கொடுத்த தென் ஆபிரிக்க அணி 3 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. தொடர்ந்து செஞ்சூரியன் நகரில் நடைபெற்ற 3ஆவது ஆட்டத்தில் இந்திய அணி 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. 3ஆவது ஆட்டத்தில் 3ஆவது வீரராக களமிறங்கிய இந்திய அணியின் இளம் நட்சத்திரமான திலக் வர்மா 56 பந்துகளில் 107 ஓட்டங்கள் விளாசி அசத்தியிருந்தார்.

இதன் மூலம் 4 ஆட்டங்கள் கொண்ட ரி - 20 தொடரில் இந்திய அணி 2 - 1 என முன்னிலை பெற்ற நிலையில், கடைசி போட்டி ஜொகன்னஸ்பேர்க்கில் உள்ள வாண்டரர்ஸ் மைதானத்தில் நடைபெற்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 20 ஓவர்களுக்கு ஒரு விக்கெட் இழப்புக்கு 283 ஓட்டங்களை குவித்து அசத்தியது.

சஞ்சு சாம்சன் மற்றும் திலக் வர்மா இருவரும் சதம் அடித்தனர். அபிஷேக் சர்மா 36 ஓட்டங்கள் எடுத்தார். திலக் வர்மா 120 ஓட்டங்கள், சஞ்சு சாம்சன் 109 ஓட்டங்கள் எடுத்து இருவரும் இறுதி வரை ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

284 என்ற இமாலய இலக்குடன் களமிறங்கிய தென் ஆபிரிக்க அணி ஆரம்பம் முதலே தடுமாற்றத்துடன் விளையாடியது.

இந்த நிலையில் அந்த அணி 18. 2 ஓவர்களில் 10 விக்கெட்கள் இழப்புக்கு 148 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. அர்ஷ்தீப் சிங் அதிகபட்சமாக 3 விக்கெட்களை வீழ்த்தினார். இதன் மூலம் தென் ஆபிரிக்காவுடனான 4 ஆவது ரி - 20 போட்டியில் வெற்றி பெற்று 3 - 1 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றியது இந்திய அணி.

(எ)

# இந்தியா - ஆஸி. டெஸ்ட் 22ஆம் திகதி ஆரம்பம்

பெர்த், நவ. 18

இந்திய கிரிக்கெட் அணி அவுஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட பார்டர் - கவாஸ்கர் கிண்ண தொடரில் விளையாடவுள்ளது. இந்தத் தொடரின் முதல் போட்டி எதிர்வரும் 22ஆம் திகதி பெர்த் மைதானத்தில் தொடங்குகிறது.

இதற்குத் தயாராகும் வகையில் இந்திய அணி வீரர்கள் தங்களுக்குள்ளேயே இரு அணிகளாக பிரிந்து வாகா மைதானத்தில் பயிற்சி ஆட்டத்தில் விளையாடி வருகின்றனர். இதில் பிரசித் கிருஷ்ணா வீசிய பந்தில் முழங்கையில் காயமடைந்த கே. எல். ராகுல் மைதானத்தில் இருந்து வெளியேறினார். அவரது காயத்தின் தன்மை குறித்து இதுவரை பி. சி. சி. ஐ. முறைப்படி அறிவிக்கவில்லை. இந்த நிலையில் சுப்மன் கில்லுக்கு விரலில் காயம் ஏற்பட்டுள்ளது. அவரது இடது கை கட்டை விரலில் எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. வழக்கமாக இது போன்ற காயம் குணமடைவதற்கு 14 நாட்கள் வரை ஆகும். இதனால் முதல் டெஸ்ட் போட்டியில் சுப்மன் கில் களமிறங்குவதற்கான வாய்ப்புகள் குறைவு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 2ஆவது டெஸ்ட் போட்டி டிசெம்பர் 6ஆம் திகதி தொடங்குகிறது. அதற்குள் சுப்மன் கில் முழு உடற்தகுதி நிலை [illegible] என எதிர்பார்க்கப்படுகிறது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய அமைச்சரவை...

முதலாவது அமைச்சரவை கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறும் என்று கூறப்படுகின்றது.

இதேநேரம், தேசியப் பட்டியல் மூலம் எம். பியாகும் பிமல் ரத்நாயக்க சபாநாயகவராக நியமிக்கப்பட வாய்ப்புள்ளது. இதேபோன்று, துணை சபாநாயகராக சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர் ஒருவர் நியமிக்கப்படுவார் என்றும் அறிய வருகின்றது.

அனைத்து அமைச்சுகளுக்கும் பிரதி அமைச்சர்களும் நியமிக்கபடுவர் என்றும் அந்தக் கட்சியின் வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## தமிழ் அரசின்...

பின்னர் தீர்மானிக்கப்படும் என்று சிறீதரன் மேலும் தெரிவித்தார்.

நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் இலங்கை தமிழ் அரசுக் கட்சி 7 ஆசனங்களை கைப்பற்றியது. அத்துடன், தேசியப் பட்டியல் மூலமாக ஓர் ஆசனத்தை கைப்பற்றி 8 ஆசனங்களுடன் பாராளுமன்றத்தில் மூன்றாவது சக்தியாக உள்ளது. தற்போது தெரிவான பாராளுமன்ற உறுப்பினர்களில் சிறீதரன் மட்டுமே நீண்ட காலம் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்துள்ளார். அவர் கடந்த 2010ஆம் ஆண்டு தொடக்கம் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## தேசியப்...

இராமலிங்கம் சந்திரசேகரம், வன்னி மாவட்டத்தில் போட்டியிட்ட ஆர். எச். உபாலி சமரசிங்க, கிழக்கு மாகாணத்தில் அம்பாறையை சேர்ந்த அபூபக்கர் ஆதம் பாவா ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

இவர்கள் தவிர, பிமல் ரத்நாயக்க, மருத்துவர் அநுர கருணாதிலக, பேராசிரியர். உபாலி பன்னிலகே, எரங்க உதேஸ் வீரரத்ன, அருணா ஜெயசேகர, மருத்துவர் ஹர்ஷன சூரியப்பெரும, ஜனித ருவன் கொடித்துவக்கு, புண்ய சிறீ குமார ஜெயக்கொடி, மருத்துவர் நஜித் இந்திக்க, சுகத் திலகரத்ன, சட்டத்தரணி லக்மாலி ஹேமச்சந்திர, சுனில் குமார் கமகே, காமினி ரத்நாயக்க, பேராசிரியர். ருவன் சமிந்த ரணசிங்க, சுகத் வசந்த டி சில்வா ஆகியோர் தேசிய பட்டியல் எம். பிக்களாகின்றனர். (ஐ)

## அர்ப்பணிப்புடன்...

காரணத்துக்காக மக்கள் என்னை நிராகரித்தனர்.

எனக்கு எதிராக போலிப் பிரச்சாரங்களை எதிர்க்கட்சிகளும் போட்டியாளர்களும் முன்வைத்திருந்தனர். அது தோல்விக்கு ஒரு காரணமாக இருந்தது. எனது தொழில் அரசியல் அல்ல. நான் ஒரு மருத்துவர். கட்சி இந்தப் பதவியை தராவிட்டால் மீண்டும் ஓர் அரச உத்தியோகத்தராக செயல்படும் எண்ணத்திலேயே இருந்தேன்.

வன்னி மாவட்டமானது திட்டமிட்ட இன அழிப்பு நடக்கின்ற ஒரு பிரதேசம். எனவே அதை உணர்ந்து செயல்படக்கூடிய ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் தேவையை அறிந்து கட்சி ஆசனத்தை வழங்கியுள்ளது.

என் மீது கட்சி வைத்த நம்பிக்கையை ஏற்று இந்தப் பகுதி மக்களுக்கு முழுமையான எனது சேவையை அர்ப்பணிப்போடு செய்வேன். அந்த வகையில் வாக்களித்த - வாக்களிக்காத மக்களுக்கும் நன்றிகள் - கட்சிக்கும் நன்றிகள்.

இனிவரும் ஐந்து வருடங்களில் சத்தியலிங்கம் எப்படி செயல்படுவார் என்பதை அனைவரும் நிச்சயமாக பார்ப்பீர்கள். கட்சியின் பொதுச் செயலாளர் பதவியிலும் தொடருவேன். அது பொதுச் சபையில் தீர்மானிக்கபடக் கூடிய ஒரு விடயம். அதனை விடுவதற்கான சந்தர்ப்பம் இன்னும் ஏற்படவில்லை - என்றார். (ஐ)

## வியாழனன்று...

அரசமைப்பின் 33 (ஆ) உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்தின் வைபவ ரீதியான அமர்வுகளில் தலைமை தாங்குவதற்கும் ஜனாதிபதிக்கு அதிகாரம் உள்ளது.

இதன்போது ஜனாதிபதியால் அவரின் அரசாங்கத்தின் எதிர்கால நோக்கு தொடர்பிலான விளக்கமான பகுப்பாய்வு கொள்கை பிரகடனத்தின் ஊடாக பாராளுமன்றத்துக்கும் மக்களுக்கும் முன்வைக்கப்படும்.

பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் எதிர்வரும் 21ஆம் திகதி - வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (ஐ)

## ஜனாதிபதியின்...

நாடாகவே இந்தியா இருக்கும் என்று கூறப்படுகின்றது. இவ்வாறு நடந்தால் அது இலங்கை அரசியல் பாரம்பரியத்தில் ஏற்படும் மாற்றமாகவே அமையும். ஏனெனில், வழக்கமாக புதிதாக பதவியேற்கும் ஜனாதிபதிகள், பிரதமர்கள் தமது முதல் வெளிநாட்டு பயணத்தை இந்தியாவுக்கு மேற்கொள்வதே வழக்கமாகும்.

இதேநேரம், குறைந்த விலையில் எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க மேற்கத்தேய நாடு ஒன்றில் வசிக்கும் உலகப் புகழ்பெற்ற பேராசிரியர் மூலமாகவே நடத்தி வருகிறார். தேசிய மக்கள் சக்திக்கு நெருக்கமான அந்தப் பேராசிரி யர் மேற்கத்தேய நாடுகளில் ஒன்றில் வசிக்கின்றபோதிலும் மத்திய கிழக்கு நாடுகளுடன் நெருங்கிய நட்பு கொண்ட வர் என்று கூறப்படுகின்றது. இவரின் தலையீட்டில் இலங்கை குறைந்த விலையில் எரிபொருளை பெறுவது தொடர்பில் பல சுற்று பேச்சுகளை நடத்தியுள்ளது.

இந்தப் பேச்சுகள் வெற்றியடை யும் பட்சத்தில் அது இலங்கைக்கு கிடைக்கும் பெரு வெற்றியாக அமையும். அத்துடன், குறைந்த விலையில் எரிபொருளையும் வழங்க முடியும். எனவே, ஜனாதிபதி இந்தப் பேச்சை வெற்றிபெற வைப்பதற்காக புதிய அரசாங்கம் அமைந்ததும் மத்திய கிழக்கு நாட்டுக்கு பயணமாவார் என்று கூறப்படுகின்றது.

இவ்வாறு பயணமாகும் எண்ணெய் தொடர்பான ஒப்பந்தங்களிலும் கைச்சாத்திடுவார் என்று கூறப்படுகின்து. (ஐ)

## ஐ.எம்.எவ்...

நீட்டிகப்பட்ட கடன் வசதியின் கீழ் இலங்கைக்கு கிடைக்கப்பெறும் மொத்தக் கடன் தொகை 290 கோடி அமெரிக்க டொலர்களாகும்.

முதல் தவணையான 33. 3 கோடி அமெரிக்க டொலர் 2023 மார்ச் 21ஆம் திகதியும் இரண்டாவது தவணையாக 33. 7 கோடி அமெரிக்க டொலர் அதே வருடம் டிசெம்பர் 13 ஆம் திகதியும் இலங்கைக்கு விடுவிக்கப்பட்டது.

மூன்றாவது கடன் தவணையாக இவ்வருடம் ஜூன் 12ஆம் திகதி 33. 6 கோடி அமெரிக்க டொலர் கிடைத்துள்ளது. இதுவரையில் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு 100 கோடி அமெரிக்க டொலர்களுக்கு மேல் வழங்கியுள்ளது.

ஒவ்வொரு கடன் தவணையின் பின்னரும் முன்னேற்றம் பற்றிய மீளாய்வு மேற்கொள்ளப்பட்டதுடன், அதற்கமைவாக சர்வதேச நாணய நிதியத்தின் சிரேஷ்ட பணித் தலைவர் பீற்றர் ப்ரூவர் தலைமையிலான பிரதிநிதிகள் குழு மூன்றாவது மீளாய்வுக்காக நேற்று இலங்கை வந்துள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்துவது மற்றும் நாட்டின் பொருளாதார சீர்திருத்த வேலைத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றம் குறித்து இதன்போது ஆராயப்படவுள்ளது.

இந்த மூன்றாவது மீளாய்வின் பின்னர் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கான தனது நான்காவது கடன் தவணையை விடுவிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மன்னார் படை முகாமில் 500 பேர் தனிமைப்படுத்தல்!

மன்னார், நவ. 187

மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள பெரியமடு இராணுவ பயிற்சி முகாமில் 500இற்கும் மேற்பட்ட சிப்பாய்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

அவர்களில் சிலருக்கு ஏற்பட்ட திடீர் சுகயீனம் காரணமாக அவர்கள் மன்னார் பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு முன்னெடுக்கப்பட்ட மருத்துவ பரிசோதனையில், அவர்கள் மூளைக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதனை, மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகர் மருத்துவர் அஸாத் எம் ஹனீபா உறுதிபடுத்தினார்.

இந்த நிலையில் குறித்த பயிற்சி முகாமில் பயிற்சி நடவடிக்கைகளை நிறுத்த மருத்துவர்கள் குழு பரிந்துரைத்துள்ளது. இதையடுத்து, அங்கு பயிற்சி பெற்ற 500 இராணுவத்தினர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ஐ)

# தேசிய மக்கள் சக்தியின் வெற்றிக்கு பாற்சோறு கொடுத்து கொண்டாட்டம்!

கொழும்பு, நவ. 18

இலங்கையின் 10ஆவது பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி 159 ஆசனங்களைக் கைப்பற்றி வரலாற்று சாதனையைப் படைத்தமையை முன்னிட்டு நானுஓயாவில் வெற்றிக் கொண்டாட்டம் நடைபெற்றது.

நானுஓயா டெஸ்போட் கிரிமிட்டி ஆலயத்துக்கு முன்பாக தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் பொது மக்களுக்கு பாற்சோறும் இனிப்புப் பண்டங்களும் வழங்கினர்.

இதன்போது, தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினரும்



நுவரெலியா மாவட்ட அமைப்பாளருமான மூக்கையா பாஸ்கர் பங்கேற்று தேர்தலில் வாக்களித்தவர்களுக்கு நன்றி தெரிவித்தார். (ஐ)

## தமிழ் அரசின் தேசிய...

செய்தியாளர்களுக்கு சுமந்திரன் அறிவித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், நீண்ட வாதப் பிரதிவாதங்களின் பின்னரே தேசியப் பட்டியல் மூலமான பாராளுமன்ற உறுப்புரிமையை ப. சத்தியலிங்கத்துக்கு வழங்க மத்திய குழு தீர்மானித்ததாகவும் சுமந்திரன் கூறினார்.

இதேசமயம், நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் ப. சத்தியலிங்கம் வன்னி தேர்தல் மாவட்டத்தில் போட்டியிட்டிருந்தார். அவர் 4 ஆயிரத்து 33 விருப்பு வாக்குகளை பெற்று தோல்வியடைந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## வடக்கின்...

சேவை தமிழ் மக்களுக்கும், கட்சிக் கும் தேவை. சம்பந்தன் ஐயா சொன்னதைப்போல, எல்லாம் மடியில் வந்து தானாக விழும். விரைவில் - அடுத்த ஆறு மாதங்களுக்குள் வடக்கு மாகாண சபை தேர்தல் வரும். அதற்கு எமக்கு பொருத்தமான முதலமைச்சரும் தேவை. சுமந்திரன் பொறுமையாக இருந்தால், எல்லாம் தானாக அமையும்", என்றார். (ஐ)

## அனைத்து...

மாவட்டங்களுக்கு ஏற்பட்டுள்ள வெற்றிடங்களையும் கருத்தில்கொண்டு தேசி யப் பட்டியல் ஆசனத்தை மருத்துவர் சத்தியலிங்கத் திற்கு வழங்குவதற்கு தீர்மானம் எடுத்தோம். இந்தப் பிரதேசத்தில், ஆக்கிரமிப்புகள் நடைபெறுவதையும் கருத்தில் கொண்டே ஓர் ஒத்த முடிவுக்கு வந்துள்ளோம்.

அத்துடன், 2001ஆம் ஆண்டு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதன் நோக்கம் மற்றும் இலக்கின் அடிப்படையில் அனைவரையும் அரவணைத்துச் செல்வதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். அதில் அதிக கரிசனையும் விருப்பமும் எங்களுக்கு இருக்கிறது.

எனது தேர்தல் பிரசாரங்களிலும்கூட அந்த ஆணையை வழங்குமாறு மக்களிடம் கேட்டிருக்கிறேன். எனவே, நாங்கள் ஒன்றாக - பலமாக இணைந்து செல்லவேண்டிய தேவையை உணர்ந்திருக்கிறோம். அதற்காக நாங்கள் தொடர்ந்து செயல்படுவோம்.

நான் தமிழ் அரசுக் கட்சியின் தெரிவு செய்யப்பட்ட தலைவர். நீதிமன்ற தடை உத்தரவு நீக்கப்பட்டால் நான் தலைவராக செயல்படுவேன். அதற்கான காலம் கனிந்துகொண்டிருப்பதாக உணர்கிறேன் - என்றார். (ஐ)

## புதிய...

அரசமைப்பு, ஜனநாயகத்தை வலுப்படுத்துதல், நாட்டு மக்களின் உரிமைகள் சார்ந்த விடயங்கள் மற்றும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை ஒழித்தல் போன்ற வாக்குறுதிகள் அளிக்கப்பட்டி ருந்தன. இவை அனைத்தும் நிறைவேற் றப்படும்.

நாட்டின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு புதிய அரசமைப்பை பாராளுமன்றத்தில் முன்வைப்பது மாத்திரமன்றி, சர்வஜன வாக்கெடுப்பு மூலம் அதனை மக்கள் அனுமதியுடன் நிறைவேற்றுவோம். ஆனால், புதிய அரசமைப்பை தயாரிப்பது என்பது சவால் மிக்கதொரு பணி என்பது எமக்கு தெரியும். எனினும், அதனை வெற்றிகரமாக செய்து முடிப்போம். இதேபோன்று தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை நடைமுறைப்படுத்துவதில் உறுதியாக உள்ளோம்.

கடந்த கால அனுபவத்தின் அடிப்படையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எவ்வாறு பயன்படுத்துவது என்பதில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் எச்சரிக்கையுடன் இருக்கும் எனவும் குறிப்பிட்டார்.

இரண்டு முக்கிய நோக்கங்களுக்காகவே ஐரோப்பாவில் அரசமைப்பு நிறைவேற்றப்பட்டன. அதாவது, மக்கள்மீது ஓர் அரசின் அதிகாரத்தை (அரசமைப்பு கட்டுப்பாடுகள்) கட்டுப்படுத்தவும் சமத்துவத்துக்கான முழுமையான உத்தரவாதங்களை வழங்குவதன் மூலம் பெரும்பான்மையினரின் அதிகாரத்தை கட்டுப்படுத்தும் நோக்கங்களே அவையாகும்.

எவ்வாறாயினும், இலங்கையில் நிறைவேற்றப்பட்ட 1978ஆம் ஆண்டு அரசமைப்பில் குறிப்பாக ஜனாதிபதி மற்றும் அரச இயந்திரத்தின் தன்னிச்சையான அதிகாரங்களை அதிகரித்ததன் மூலம் நேர்மறையான விடயங்களே இடம்பெற்றுள்ளன. 1972 மற்றும் 1978 அரசமைப்புகளில் அமைச்சர்களின் தன்னிச்சையான அதிகாரங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# அநுரவின் புதிய அரசமைப்பை நாம் முழுமையாக எதிர்க்கிறோம்!

## கஜேந்திரகுமார் அறிவிப்பு



யாழ்ப்பாணம், நவ. 18

**"ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவும் அவர் சார்ந்த தேசிய மக்கள் சக்தியும் ஒரு புதிய அரசமைப்பாக எண்ணியிருக்கின்ற வரைபை நாங்கள் முழுமையாக எதிர்க்கின்றோம்" என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் உள்ள தமது கட்சி பணிமனையில் செய்தியாளர்களை சந்தித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசியம் சார்ந்த அரசியலுக்கும் கொள்கை சார்ந்த - தமிழ் மக்களுடைய இருப்பு சார்ந்த விடயங்களுக்கும் எதிர்காலத்தை மிகவும் சவாலுக்குரியதாகவே பார்க்கின்றோம். இதில் வரப்போகின்ற ஐந்து வருடங்களில் மிக முக்கியமானது வரப்போகின்ற முதலாவது வருடம்தான்.

தேர்தல் முடிவுக்குப் பிறகுகூட ஜே.வி.பியின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தங்களது கட்சிக்கு வடக்கில் ஆசனங்கள் கிடைத்துள்ளன என்றும் இனவாதத்தை மக்கள் நிராகரித்துள்ளனர் எனவும் சொல்லியுள்ளார். அந்தக் கருத்திலேயே தமிழ் மக்களுக்கு இருக்கக்கூடிய ஆபத்துகள் மிகத் தெளிவாக அம்பலமாகியுள்ளன.

தமிழ்த் தேசிய அரசியலில் தமிழ் மக்களுடைய உரிமை சார்ந்த நிலைப்பாட்டுக்கு இத்தனை வருடங்களாக தமிழ் மக்கள் ஆணை வழங்கி வந்திருக்கின்ற நிலையில் அந்த ஆணையை இனவாதம் என்று சொல்லி கொச்சைப்படுத்துகின்ற வகையில் ரில்வின் சில்வா பேசியுள்ளார்.

உண்மையில், சிங்கள - பௌத்த பேரினவாதத்துக்கு எதிராக தமிழ் மக்கள் தமது நிலைப்பாட்டை எடுத்து வந்திருக்கின்ற நிலையில் அந்தத் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை இனவாத நிலைப்பாடாக கொச்சைப்படுத்தி இன்றைக்குத் தேர்தல் முறையில் உள்ள ஒரு சில முறைகளால் எண்ணிக்கையில் ஒரு சில ஆசனங்களை பெற்றுக்கொண்டதை வைத்துக்கொண்டு ஒட்டுமொத்த தமிழ்த் தேசிய நிலைப்பாட்டை நிராகரிக்கின்ற என்று சொல்கின்ற கருத்துக்கள் எந்தளவுக்கு ஆபத்து என்பதை எமது மக்கள் உணர வேண்டும்.

அந்த வகையில்தான் தேர்தல் காலத்திலும் நாம் எமது மக்களுக்கு தொடர்ச்சியாக ஒரு விடயத்தைச் சொல்லி வந்தோம். அதாவது இந்த அரசு தேர்தல் முடிந்த கையோடு 2015 முதல் 2019 வரை தயாரிக்கப்பட்ட ஏக்கிய ராஜ்ஜிய என்ற ஒற்றையாட்சி அரசமைப்பை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும் என்று சொன்னோம்.

அந்த ஒற்றையாட்சி ஏக்கிய ராஜ்ஜியவை நிராகரித்து எங்களுடைய மக்களின் ஆணையைக் காட்டி தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றக்கூடிய ஒரு தீர்வுக்குக் கடுமையான அழுத்தங்களைக் கொடுப்போம் என்ற கருத்தைத்தான் நாங்கள் சொல்லியிருந்தோம்.

எதிர்காலத்தில் தமிழ்த் தேசம் அங்கீகரிக்கப்படுகின்ற - சுயநிர்ணய அடிப்படையில் சமஷ்டி தீர்வை எட்டுவதற்கான அழுத்தங்களைக் கொடுப்பதற்கான செயல்பாடுகளை நாங்கள் முன்னெடுக்கவுள்ளோம் - என்றார். (ஐ)

# ஆவா குழுவினர் உட்பட நால்வர் கொழும்பில் கைது!

கொழும்பு, நவ. 18

ஆவா குழுவினர் என்று சந்தேகிக்கப்படும் இருவர் உட்பட நால்வரை மட்டக்குளி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொழும்பு - மட்டக்குளி பிரதேசத்தில் ரோந்து சென்ற பொலிஸார் நால்வரை கைது செய்துள்ளனர்.

கைதானவர்கள் 24, 26, 27 மற்றும் 32 வயதுடையவர்கள் எனவும் இவர்கள் மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவை சேர்ந்தவர்கள் என்றும் தெரிவித்தனர்.

கைதானவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில் இருவர் ஆவா குழுவை சேர்ந்தவர்கள் என்று கூறியுள்ளனர்.

மற்றைய இரு சந்தேக நபர்களும் கடந்த ஒக்ரோபர் மாதம் டுபாயில் இருந்து இலங்கைக்கு வந்துள்ளனர்.

டுபாயில் உள்ள ஒருவரின் ஆலோசனையின் பேரில் மேற்கண்ட 'ஆவா' கும்பலைச் சேர்ந்த இருவரையும் திருகோணமலையில் இருந்து மட்டக்குளிக்கு அழைத்து வந்ததாக தெரியவந்துள்ளது.

மேற்படி 'ஆவா' கும்பலைச் சேர்ந்த இருவர் டுபாயில் உள்ள ஒருவருக்கு 'ரிக்ரொக்' செயலி மூலம் மிரட்டல் விடுத்தமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# போதைப்பொருளுடன் வவுனியா இளைஞர் கைது!

வவுனியா, நவ. 18

வவுனியா - பறயனாலங்குளம் - ஆண்டியாபுளியங்குளம் பிரதேசத்தில் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் நேற்று சனிக்கிழமை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பறயனாலங்குளம் பொலிஸ் நிலைய அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் செட்டிக்குளம் பகுதியை சேர்ந்த 42 வயதுடையவர் ஆவார். சந்தேக நபரிடமிருந்து 5 கிராம் 100 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பறயனாலங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# குற்றப்பத்திரிகை பிரதியை வாங்க மறுத்தார் சுமந்திரன்



வவுனியா, நவ. 16

தமிழ் அரசுக் கட்சியின் பதில் செயலாளர் ப. சத்தியலிங்கம் மீது தான் சுமத்திய குற்றப்பத்திரிகையின் பிரதியை சுமந்திரனிடம் சிவமோகன் நேற்று வழங்க முற்பட்டார். அந்தப் பிரதியை வாங்க சுமந்திரன் மறுத்துவிட்டார்.

தமிழ் அரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று நடைபெற்றது.

இதன்போது கட்சியின் செயலாளரின் பொறுப்பற்ற தான்தோன்றித்தனமான செயற்பாடுகளால் கட்சியின் கூட்டுப்பொறுப்பு உருக்குலைக்கப்பட்டது. இது தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும் என்று கோரி சிவமோகன் குற்றபத்திரிகையை தயார் செய்து அதன் பிரதியை சகல மத்திய குழு உறுப்பினர்களுக்கும் வழங்கினார்.

அவரின் பிரதியை சுமந்திரன் வாங்க மறுத்துவிட்டார் - என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# நாட்டில் தீர்க்கப்படாத பிரச்னைகளை அநுர தலைமையிலான அரசு தீர்க்கும்!

## தமிழர் விடுதலை கூட்டணி நம்பிக்கை

மட்டக்களப்பு, நவ. 18

நடைபெற்ற தேர்தலில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்திருக்கிறது. இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இந்த நாட்டிலே தீர்க்கப்படாத பிரச்னைகளை தீர்ப்பார்கள் என நாம் நம்புகின்றோம் என்று தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர் அருண்மொழிவர்மன் தம்பிமுத்து தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையில் நடந்து முடிந்த பாராளுமன்ற பொது தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆதரித்து வாக்களித்த அனைத்து மக்களுக்கும் எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

தற்போது இலங்கையில் பாராளுமன்றத்தில் புதிய அரசாங்கம் பதவியேற்க இருக்கிறது. அநுரகுமார திஸநாயக்க அவர்களுக்கும் அவரின் தேசிய மக்கள் சக்திக்கும் மூன்றில் இரண்டு ஆசனங்கள் கிடைக்கப்பெற்றிருக்கின்றன. இந்த சந்தர்ப்பத்தை அவர்கள் முழுமையாக பாவித்து இந்த நாட்டிலே தீர்க்கப்படாத பல விடயங்களை தீர்ப் பார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. அதை அவர்கள் கையில் எடுக்க வேண்டும் என்ற விடயத்தையும் நான் அவர்களுக்கு வலியுறுத்த கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் எமது ஆதரவாளர்களும் தமிழர் விடுதலைக் கூட்டணியானது 20 வருடங்களுக்கு பின்னர் மீண்டும் புத்தெழுச்சி பெற வேண்டும் என்று கடுமையாக உழைத்துக்கொண்டு இருக்கிறார்கள். எமது கட்சியின் ஆதரவாளர்களுக்கும் நான் கூற விரும்பும் விடயம் என்னவென்றால், எமது செயல்பாடு தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் தமிழர் விடுதலை கூட்டணியானது தற்போது ஏற்பட்டிருக்கின்ற இந்த நிலையில் இருந்து முழுமையாக புத்தெழுச்சி பெறும் என்ற முழுமையான நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அதற்கான வேலைத் திட்டங்களில் நான் முன்னெடுத்துச் செல்ல இருக்கின்றேன் - என்றார். (ஐ)

# போதைப்பொருளுடன் ஆழ்கடலில் ஐவர் கைது

கொழும்பு, நவ. 18

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட பல நாள் மீன்பிடி படகுடன் ஐவரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

ஆழ்கடலில் நடத்தப்பட்ட விசேட நடவடிக்கையில் இலங்கைக்கு மேற்கே சுமார் 110 கடல் மைல் (200 கி.மீ) தொலைவில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைப்பற்றப்பட்ட படகில் சுமார் 40 கிலோ போதைப் பொருள் இருப்பதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

படகு மற்றும் சந்தேக நபர்கள் தற்போது மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கடற்படையினரால் கரைக்கு கொண்டுவரப்பட்டனர். (ஐ)

# பாடசாலை ஆய்வகம் முற்றாகத் தீக்கிரை!





மாத்தளை, நவ. 18

மாத்தளையில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தால் பாடசாலை ஒன்றின் ஆய்வகம் முற்றாக எரிந்து நாசமானது.

மாத்தளை உக்குவெல அஜ்மீர் வித்தியாலயத்தின் ஆய்வகத்திலேயே இவ்வாறு தீ பரவி அது எரிந்து நாசமானது.

வெள்ளிக்கிழமை இரவு 10. 30 மணியளவில் இந்தத் தீ விபத்து ஏற்பட்டது.

சம்பவம் தொடர்பில் மாத்தளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.11.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.